


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524







29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் இருமுறை இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit










உதயம் 1561 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 6, 2026

# கிளிநொச்சி வைத்தியசாலையில் உள்ள செயற்கைக் கருத்தரிப்பு மையத்தை சீராக இயங்கவைக்கும் திட்டம் பற்றிய விளக்கவுரைகளை செவிமடுக்க வைத்த பயனுள்ள கருத்தரங்கு!

**எம்பிபி லோகன் கணபதி, டாக்டர ராஜேஷ் லோகன் மற்றும் டாக்டர் மைலாசன் ஆகியோரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மருத்துவத்துறை பேராசிரியர்கள் ராஜேந்திரா சுரேந்திரகுமாரன். சிவலிங்கராஜா ரகுராமன். ரவிராஜ் ஆகியோர் இணையவழியாக கலந்து கொண்டு பகிர்ந்து கொண்ட சேவை நோக்கம் கொண்ட எண்ணங்கள்!**

கடந்த மார்ச் 2ம் திகதி திங்கட்கிழமை அன்று கனடா மார்க்கம் நகரில் “வன்னி வீதி“க்கு அருகாமையில் அமைந்துள்ள “ஆன்லின் சனசமூக நிலைய” த்தின் கூட்ட அறையில் நடைபெற்ற மேற்படி கிளிநொச்சி செயற்கைக் கருத்தரிப்பு மையம் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு மற்றும் விளக்கவுரைகளை சமர்ப்பித்தல் ஆகிய நிகழ்வுகளை, மார்க்கம் தொகுதி மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடு செய்து அத்துடன் தலைமை தாங்கியும் அதனை நடத்தினார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)







# ”எமது தாயகத்திலிருந்து அனுபவமிக்க ஊடகவியலாளர்கள் கனடாவிற்கு குடிபெயர்ந்துள்ளமை எமக்கு நம்பிக்கைகளைத் தருகின்றது”

## ஸ்காபுறோவில் "ஆதி தொலைக்காட்சி" என்னும் காட்சி ஊடகத்தின் தொடக்க விழாவில் "உதயன்" லோகேந்திரலிங்கம் தெரிவிப்பு

“எமது தாய் மண்ணான இலங்கையிலிருந்தும் மலேசியா போன்ற தமிழ் மணம் கமழும் ஏனைய சில நாடுகளிலிருந்தும் அனுபவமும் ஆற்றலும் மிக்க பல ஊடகவியலாளர்கள் அண்மைக்காலங்களில் கனடாவிற்கு குடிபெயர்ந்துமை எமக்கு நம்பிக்கைகளைத் தருகின்றது. அவர்களில் பலர் அச்சு ஊடகம் - காட்சி ஊடகம் மற்றும் வானொலித்துறை ஆகியவற்றில் பெற்ற அனுபவங்களோடு வந்துள்ளார்கள் அவர்களின்அனுபவங்களை கனடாவில் பயன்படுத்த புதிதாக ஊடக நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. எனவே இன்று தொடங்கிவைக்கப்பெறுகின்ற” “ஆதி தொலைக்காட்சி“ என்னும் புதிய காட்சி ஊடகத்திற்கு இந்த ஆளுமைகளின் பங்களிப்பு கிட்டுகின்றபோது “ஆதி தொலைக்காட் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் தோன்றும்.
(தொடர்ச்சி 22ம் பக்கம்)



இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524









கனடிய செய்திகள்
Canadian News

# "ஒன்ராறியோ பிளேஸ்" இல் புதிய உலகத்தரத்திலான அறிவியல் மைய வடிவமைப்பை வெளியிட்டது ஒன்ராறியோ அரசு




400,000 சதுர அடி பரப்பளவில், அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய ஒன்ராறியோ அறிவியல் மையக் கட்டுமானத்திற்கான ஒப்பந்தத்தை ஒன்ராறியோ அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதனை 2029ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது மெருகூட்டப்பட்ட "ஒன்ராறியோ பிளேஸ்"இன் முக்கிய அங்கமாக, ஊடாடும் (ஐவெநசயஉவைைந) கண்காட்சிகள், இணைக்கப்பட்ட வளாகங்கள் மற்றும் மறுவடிவமைக்கப்பட்ட திரைக்கூரை ஆகியவற்றைக் கொண்டு, முன்னரை விடவும் அதிகமான நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இது அமையவுள்ளது. மிகப்பெரும் அளவிலான இம்மறுசீரமைப்புத் திட்டம் 5,700 வேலைகளை உருவாக்குவதுடன், கட்டுமானக் கட்டத்தில் மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 420 மில்லியன் டொலர் வரையிலான பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்கார்பரோ மற்றும் ரொறன்ரோ ஆகிய நகரங்களில் வாழும் மக்களுக்கு அருகில், ஏரிக்கரையை அண்டிய இவ்விடமாற்றம், புதிய "ஒன்ராறியோ வழித்தடம்" (Ontario Line) மற்றும் கண்காட்சி நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட "கோ" (GO) போக்குவரத்து இணைப்புகள் மூலம் அங்கு பயணிப்பவர்களின் பயணங்களை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்புதிய வளாகத்தின் நீண்டகால தொலைநோக்குப் பார்வை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஒன்றாரியோ இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள், "ஒன்ராறியோ மக்கள் நீண்டகால நினைவுகளையும் வாழ்நாள் முழுமைக்கும் நீடிக்கும் அனுபவங்களையும் பெறக்கூடிய ஒரு இடத்தை நாம் உருவாக்கி வருகிறோம்" என்றார். ஏரிக்கரைப் பகுதியை குடும்பங்கள் பொழுதுபோக்க ஏற்ற முதன்மையான இடமாக மாற்றுவதன் மூலம், மாநிலம் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதுடன், சுற்றுலாத்துறையையும் ஊக்குவித்து ஆண்டுதோறும் ஆறு மில்லியன் பார்வையாளர்களை ஈர்க்கும் எனவும் இதனால் ஒன்றாரியோ மாகாணத்தின் வருமானம் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

*- Uthayan LJI Journalist Arjune -*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# "பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்கியவண்ணம் உணர்வுகளை புரிந்து மக்களோடு பயணிக்க அரசு தயாராக இருக்க வேண்டும்"

## மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை வேண்டுகோள்!

**- எஸ்.ஆர்.லெம்பேட்**

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்கு வதில் அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இதற்குப் பதிலாக வேறு சட்டங்களை முன் மொழியாது மக்களின் உணர்வுகளை புரிந்து மக்களோடு பயணிக்க அரசு தயாராக இருக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை மறைமாவட்ட மக்களுக்கு எழுதிய தவக்கால திரு மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மடலில் மேலும் குறிப்பிடுகையில், கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நமது வழிபாட்டு ஆண்டில் தவக்காலம் ஒரு முக்கியமான காலம் ஆகும். திருநீற்றுப் புதனில் ஆரம்பித்து ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா வரையிலான நாற்பது நாட்களைக் கொண்ட இந்தத் தவக்காலம் ஒரு வகையில் நமக்கு ஞான ஒடுக்க நாட்களாகவோ, தியான நாட்களாகவோ அல்லது பல தியாகங்கள், ஒறுத்தல்கள் செய்யும் நாட்களாகவோ இருக்கின்றன.

நமது வாழ்க்கைப் பயணத்தில் இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கும் நாம், சற்று நின்று நிதானித்து, நமது ஆன்மீக வாழ்வை பற்றிச் சிந்திக்க, நமது ஆன்மீக வாழ்வை மீளாய்வு செய்ய, மீள் பரிசீலனைக்கு உட்படுத்த இத் தவக்காலம் அரியதோர் வாய்ப்பை வருடா வருடம் நமக்குத் தருகின்றது.

தவக்காலம் உறவைச் சரி செய்கின்ற, சீர் படுத்துகின்ற உன்னதமான காலமாகும். ஒவ்வொரு தனி மனிதரும் இறைவனோடும், தம்மோடும், அயலவரோடும் உறவைச் சரிசெய்ய இத் தவக்காலம் அழைப்பு விடுகின்றது.

செபம், தவம், தான தருமம் ஆகிய மூன்று செயற்பாடுகளும் இத் தவக்காலத்தின் மூன்று முக்கிய தூண்களாக உள்ளன. முதலாவது, செபத்திற்கு அதிக நேரம் ஒதுக்கி இறைவனோடு உள்ள உறவை ஆழப்படுத்துவது தவக்காலத்தில் முக்கியமாகும். இரண்டாவது, உண்ணா நோன்பு மற்றும் புலால் உணவைத் தவிர்த்தல் போன்ற தவ முயற்சிகள் மூலம் நாம் பசித்திருக்கின்றோம்.

இது நமக்குள் நாம் பயணம் செய்யவும், நம்மை ஆழமாக அறியவும், நம்மோடு நாம் உறவை சீர் செய்யவும் உதவுகிறது. மூன்றாவது தான தர்மம் என்பது வெறும் காசு, பணம், பொருளை மட்டுமல்ல, நமது நேரத்தை, அன்பை, அக்கறையை, உடனிருப்பை மற்றவர்களுக்கு கொடுப்பதும், சிலுவையின் பங்காளிகளாகுவதும் ஆகும். இது அயலவர்களுடன் நமது உறவைச் சீர் படுத்துகின்ற முயற்சியாகும்.

"கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம்" (2 கொரி 5:20) எனப் புனித பவுல் கொரிந்திய மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். இந்த அழைப்பு இன்று நமக்கும் விடுக்கப்படும் அழைப்பாகும். "இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!" (2 கொரி 6:2) என உணர்ந்து நமது ஆன்மீக வாழ்வைப் புதுப்பிக்க இத்தா காலத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போமாக!

### திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

திருத்தந்தை லியோ அவர்கள் இவ்வாண்டிற்கான தவக்காலச் செய்தியில் உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள் இத்தவக்காலத்தை செவிசாய்த்தல், உண்மையான நோன்பு மற்றும் நீதிக்கான புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பின் காலமாகக் கடைப்பிடிக்கும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

நவீன கால மனப்பதற்றங்கள் மற்றும் கவனச்சிதறல் களுக்கு மத்தியில் கடவுளை தங்கள் வாழ்க்கையின் மையத்தில் கொள்ளுமாறு அவர் விசுவாசிகளை வலியுறுத்தியுள்ளார். "செவிசாய்த்தல், நோன்பு : தவக்காலம் மனமாற்றத்தின் காலம்" என்ற தலைப்பில் தனது தவக்காலச் சிந்தனைகளை வழங்கியுள்ள திருத்தந்தை, "கடவுளுடைய வார்த்தைக்கு நம் இதயங்களைத் திறக்கும்போது மனமாற்றம் தொடங்குகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து நோன்பு குறித்து தனது சிந்தனைகளை திருப்பிய திருத்தந்தை, இது கடவுளின் வார்த்தையை பெற இதயத்தைத் தயார்படுத்துவதற்கான ஓர் உறுதியான வழி என்று விவரித்துள்ளார். "உணவைத் தவிர்ப்பதைத் தாண்டி, விசுவாசிகள் தங்கள் ஆழமான ஆசைகளை ஆராயவும், நீதிக்கான தாகத்தைப் புதுப்பிக்கவும், அற்ப நிறைவில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவும் நோன்பு உதவுகிறது" என்று கூறியுள்ள திருத்தந்தை, உண்மையான நோன்பு என்பது, தற்பெருமையில் அல்ல, மாறாக, பணிவிலும் நம்பிக்கையிலும் வேரூன்ற வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.



தீங்கு விளைவிக்கும் பேச்சை தவிர்க்க வேண்டும் என்றும், கத்தோலிக்கர்கள் சமூக ஊடகங்களிலோ அல்லது பொது விவாதங்களிலோ கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தவோ தீர்ப்பளிக்க அவசரப்படவோ அல்லது அவதூறுகளைப் பரப்பவோ கூடாது. அதற்குப் பதிலாக இரக்கம், மரியாதை மற்றும் நம்பிக்கையுடன் பேசவேண்டும் என அன்போடும் அக்கறையோடும் அறிவுறுத்தியுள்ளார்.

### தூய ஆவியின் ஆண்டு

நமது மன்னார் மறை மாவட்டத்தில் இவ்வாண்டு தூய ஆவியின் ஆண்டாக பிரகடனப்படுத்தி உள்ளோம். எனவே இவ்வாண்டுக்கான நமது மேய்ப்புப்பணி திட்டங்களின் மையமாக தூய ஆவியானவர் விளங்குகின்றார். தூய ஆவியானவர் இறைவனின் வல்லமையாக இருந்து, விசுவாசிகளை வழிநடத்துகிறார், திருஅவையைப் பாதுகாக்கின்றார், அன்பு, அமைதி போன்ற கனிகளைத் தந்து, ஞானம் மற்றும் அருள் கொடைகளை பொழிந்து இயேசுவை ஆண்டவர் என அறிக்கையிட செய்கிறார். அவர் திருஅவையின் உயிர் மூச்சாகவும், உண்மையை நோக்கி வழிநடத்துபவராகவும் இருக்கின்றார்.

எனவே தூய ஆவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆண்டில் தூய ஆவி பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளவும், தூய ஆவியின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளவும் நாம் அனைவரும் முழு முயற்சி எடுப்போம். தூய ஆவியை மையப்படுத்திய நமது பங்கு மேய்ப்பு பணி திட்டங்களை ஒவ்வொரு பங்குச் சமூகமும், ஆலய சமூகமும் முனைப்போடு, பிரமாணிக்கமாக நிறைவேற்ற தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என இவ்வேளையில் அன்போடு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

### நாட்டின் இன்றைய சூழ்நிலைகள்

பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சி பீடமேறிய இன்றைய அரசாங்கத்தின் மட்டில் மக்கள் கொண்டிருந்த பல எதிர்பார்ப்புகள் இன்றும் எதிர் பார்ப்புகளாகவே உள்ளன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் வலியுறுத்தி வரும் பல பிரச்சினைகளுக்கு இன்றைய அரசாங்கம் தீர்வுகளைத் தராமல் காலத்தை இழுத்தடித்துக் கொண்டு செல்வது மன வருத்தத்திற்குரியது.

கடந்த கால தேர்தல் பரப்புரை களின் போது தமிழ் மக்களுக்கு குறிப்பாக மன்னார் மக்களுக்கு வழங்கப்பட்ட பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. மக்களின் எதிர் பார்ப்புகளும், காத்திருப்பும் தொடர்கதையாகவே உள்ளன. இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் தற்போது மீனவ சமூகம் எதிர்நோக்கும் பாரிய தொழில் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் மட்டில் அரசாங்கம் அதிக அக்கறையோடு விரைந்து செயலாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இதற்குப் பதிலாக வேறு சட்டங்களை முன் மொழியாது, மக்களின் உணர்வுகளை புரிந்து, மக்களோடு பயணிக்க அரசு தயாராக இருக்க வேண்டும்.

வேற்றுமைகளை களைந்து, சமாதான வழியில் அரசியல், சமய, சமூக முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். இது ஒன்றுபட்ட சமாதான வாழ்வுக்கு அவசியமாகும் என குறித்த மடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மடல் 1ம் திகதி ன்றைய தினம் ஞாயிறு திருப்பலியின் போது இறை மக்களுக்கு அருட்தந்தையர்களினால் வாசித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada — We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# யுத்தம் செய்வதற்காகவே தனியான ஒரு திணைக்களத்தை கொண்டுள்ள அமெரிக்காவின் நோக்கம் பிறநாடுகளின் அமைதியைக் குலைத்து அப்பாவிகளைக் கொல்வதா?

உலகின் எந்த நாடுகளிலும் நிறுவப்படாத "யுத்த திணைக்களம்" என்னும் பெயர் கொண்ட **Department of War** என்னும் அனைவரையும் பயமுறுத்தும் ஒரு அரசாங்கத்தின் துறையானது அமெரிக்காவில் தற்போது தீவிரமான இயங்கிவருகின்றது என்பதும் அதன் நிர்வாகத்திற்காக பல மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்படுகின்றன என்பதும் நாம் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் தெரிந்து கொண்டவையாகும்.

பொதுவாகவே பிற நாடுகளில் அரச திணைக்களங்கள் நிறுவப்பெறுவது அந்த நாட்டு மக்குளின் நலன்களைக் கவனிப்பதற்காகவும் குறிப்பாக சில குறிப்பிட்ட திணைக்களங்கள் செயற்படுவது வெளிநாட்டுப் பிரஜகளின் நலன்களைக் கவனிப்பதற்காகவுமே ஆகும். அந்தந்த அரச திணைக்களங்கள் வெவ்வேறான அமைச்சுக்களின் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றன என்பதும்

உலகநாடுகளின் நிர்வாகமுறைகளில் வெளிப்படையாகத் தெரிகின்ற விடயமா-கும் உதாரணமாக அமெரிக்காவில் உள்ள குடிவரவுத் திணைக்களம் என்பது அமெரிக்கர்களின் நலன்களையும் வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு வருகின்ற குடியேற்றவாசிகளின் நலன்களைகளையும் கவனிக்கின்ற அல்லத உதவிகள் வழங்குகின்ற திணைக்களம் ஆகும்.

ஆனால் அமெரிக்காவில் கடந்த பல வருடங்களாக இயங்கிவருகின்ற "யுத்த திணைக்களத்தின்" பயங்கரமான வெளிப்பாடும் பிறநாடுகளில் தாக்குதல்களை மேற்கொள்ளும் அமெரிக்காவின் கொரூர முகத்தையும் காட்டி நிற்கின்ற ஒரு அரச நிறுவனம் என்றே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வாறு பார்த்தால். பிற நாடுகளில் அரச திணைக்களங்கள் உற்பத்திக்கும் மக்கள் நலனுக்காகவும் செயற்படுகின்ற நிலையில் அமெரிக்கா மாத்திரம் யுத்தம் செய்வதற்காகவே தனியான ஒரு திணைக்களத்தை கொண்டுள்ளது எதற்காக என்ற அச்சம் அனைவரையும் தொட்டு நிற்கின்றது. அதே உணர்வோடு தான் இவ்வாரத்தின் கதிரோட்டத்தை நாம் வடிக்கின்றோம்.

எமது அவதானிப்பில்.உலகின் எந்தவொரு பெரிய நாடும் தங்கள் முதன்மை இராணுவ அதிகாரசபையாக அமைச்சரவை அந்தஸ்த்து கொண்ட "யுத்த திணைக்களத்தை" நிறுவவுமில்லை அதனை இயக்கவுமில்லை ஆனால் அமெரிக்காவில் 1945 க்குப் பிறகு "பாதுகாப்பு அமைச்சகம்" என்று மாற்றப்பட்ட இந்த பிரிவானது போர்கள் பற்றிய எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற 2025 ஆம் ஆண்டு தொடக்கமே, "யுத்த திணைக்களம்" என்று பெயரிடப்பெற்று, அது அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைக்கு அடுத்த நிலையில் கணிக்கப்பெற்றும் முக்கியத்துவம் வழங்கப்பெற்றும் ஜனாதிபதியின் நேரடிப் பார்வையின் கீழ் இயங்குகின்றது. இன்றைய நாட்களில் இந்த திணைக்களம் உலகின் பல நாடுகளில்

அமைதியை அழித்து அப்பாவி மக்களின் உயிர்களைக் குடித்தும் அந்தந்த நாடுகளின் பொருளாதார வளத்தை நாசகாரம் செய்தும் ஒரு அரச பயங்கரவாத அமைப்பாக இயங்கிவருகின்றது என்றால்.அதில் உண்மை இல்லாமல் இல்லை. கடந்த சில நாட்களாக ஈரான் தேசத்திலும் பாலஸ்தீனத்திலும் அமெரிக்காவின் கொரூர யுத்தத் தாக்குதல் இடம்பெறுவதை முன்னின்று நடத்துவதில் தற்போதைய அமெரிக்காவின் யுத்த திணைக்களத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள **Pete Hegseth** என்பவரின் உரைகளும் கருத்துப் பரிமாற்றங்களும் அத்துடன் அவரது முகபாவங்களும் மற்றவர்களுக்கு அச்சமூட்டுபவையாக காணப்படுவது கூட ஒரு திட்டமிடப்பட்ட "தந்திரம்" என்றே கருத வேண்டியுள்ளது.

இதே போன்றுதான், இலங்கையில் மகிந்த ராஜபக்சவின் சகோதரன் கோட்டாபாய என்னும் கொடியவர் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது, அவர் தற்போதைய அமெரிக்க யுத்த திணைக்களத்தின் செயலாளர் போன்று சந்திப்பவர்களை பயமுறுத்தும் பாணியில் உரையாடி அவர்களிடத்தில் ஒரு அச்ச உணர்வை தோற்றுவிப்பதும் இராணுவச் சிப்பாய்களிடத்தில் "போர் வெறியை" ஏற்படுத்துவதும் நோக்கமாகக் கொண்டிருந்தது ஆகும்.

இவ்வாறான கடந்த சில நாட்களாக ஈரான் தேசத்தின் அனைத்துக் கட்டமைப்புகளிலும் அழிவுகளையும் பாரிய உயிர்ச் சேசத்தையும் அதன் பொருளாதாரத்தை சிதைப்பதிலும் அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்துகின்ற அநியாயங்களுக்கு வேறு எந்த பெரிய நாடும் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பதையும் நாம் நேரடியாகப் பார்க்கின்றோம்.

எனினும் பிறநாடுகள் சில இந்த யுத்த செயற்பாடுகளுக்குள் இழுத்துவரப்படுகின்ற துரதிஸ்ட நிலை உருவாகியுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அவற்றுள் இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகள் விரும்பாமலே தள்ளப்பட்டுள்ள சம்பவங்கள் பற்றி எமது வாசகர்களுக்கு நாம் குறிப்பிட்டுச் சொல்லவெண்டிய அவசியம் இல்லை.

துரதிஸ்டவசமாக இந்தியாவின் கடற்படையோடு இணைந்து பயிற்சிகளை மேற்கொண்ட ஈரானின் கடற்படையினர் அந்த பயிற்சி நிறைவுற்ற பின்னர் தாயகம் திரும்பிக் கொண்டிருந்த போது இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களை "தர்மசங்கடத்திற்குள்" தள்ளிவிட்டது என்றே நாம் கருதலாம்.

ஈரானியக் கடற்படையின் ஒரு கப்பல் முதலில் அமெரிக்காவால் இலங்கைக் கடலில் தகர்க்கப்பட்டது. இதன் பின்பு இலங்கையை அண்மித்த இரண்டாவது ஈரானியக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்குள் உள் நுழைய அனுமதி

கோரியது. ஈரானின் இரண்டாவது கப்பலில் இருந்த அனைவரும் கொழும்பில் தரையிறக்கப்பட்டுள்ளனர்

இலங்கை கடல் எல்லைக்குள் தற்போது நிறுத்தப்பட்டுள்ள ஈரானிய இரண்டாவது கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்குள் உள்ளே நுழைய அனுமதி வழங்கப்பட்டது.

ஈரானிய கப்பலால் கோரப்பட்ட உதவியின் காரணமாகவே இலங்கை அரசால் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியின் பிரகாரம் கப்பலில் இருந்த 208 பணியாளர்களும் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இறக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவைப்பட்ட உணவு, தண்ணீர் போன்ற உதவிகளை இந்திய அரசாங்கம் வழங்கியது என்பதும் உலகெங்கும் பரவிய செய்திகளாகிவிட்டன. இந்த விடயம் அமெரிக்காவின் யுத்த திணைக்களத்திற்கும் அதன் தலைவர் ட்ரம்ப் அவர்களின் காதுகளுக்கும் சென்றிருக்கும் என்பதை ஊகமாக நாம் கருத முடியாது. நிச்சயம் அது நிகழ்ந்திருக்கும்.

இவ்வாறான ஒரு நிலையில் இனிவரும் நாட்களில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அமெரிக்காவிடமிருந்து. குறிப்பாக ட்ரம்பிடமிருந்து "எச்சரிக்கை" அறிவிப்பு அனுப்பிவைக்கப்படும் என்பதை நாம் எதிர்பார்க்கலாம். அது தான் ட்ரம்ப்.

இதே போன்று ஸ்பெயின் தேசத்தின் பிரதமரிடம் அமெரிக்கா கேட்டிருந்த ஒரு வேண்டுகோளை அவர் நிராகரித்த காரணத்தால் தற்போது இருநாடுகளும் மோதிக்கொள்ளும் அல்லது அந்த சிறிய நாட்டின் மீதும் தாக்குதல் நடத்த அமெரிக்க முனையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகிற்கு கேடு விளைவிக்கும் செயலுக்கு நாங்கள் உடந்தையாக இருக்க மாட்டோம் எனவும் அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணிய மாட்டோம் எனவும் ஸ்பெயின் பிரதமர் பதிலடி கொடுக்கும் வகையில் "அமெரிக்காவின் வர்த்தக மிரட்டலுக்கு பயந்து எங்கள் முடிவை மாற்றிக்கொள்ள மாட்டோம் "என ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் அதிரடியாக அறிவித்துள்ளார். ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் ராணுவ நடவடிக்கைகளுக்கு ஸ்பெயின் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. குறிப்பாக, ஸ்பெயினில் உள்ள கூட்டு ராணு-வத் தளங்களை ஈரான் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்த அமெரிக்காவிற்கு ஸ்பெயின் அனுமதி மறுத்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்க அதிபர் டிரம்ப், "பேச்சை கேட்காவிட்டால் ஸ்பெயின் உடனான வர்த்தகத்தை முற்றிலுமாக துண்டிப்போம்" என கடந்த சில நாட்களுக்கு முன் எச்சரிக்கை விடுத்தார். இந்த மிரட்டலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்பெயின் நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர் பெட்ரோ சான்செஸ், "ஈரான் போர் என்பது லட்சக்கணக்கான உயிர்களுடன் விளையாடும் ஆபத்தான ஒரு தாக்குதல். எனவே வர்த்தகப் பழிவாங்கல்களுக்கு பயந்து, உலகிற்கு கேடு விளைவிக்கும் செயலுக்கு நாங்கள் உடந்தையாக இருக்க மாட்டோம். இது எங்கள் கொள்கை மற்றும் நலன்களுக்கு எதிரானது" என திட்டவட்டமாக தெரிவித்தார்.

இவ்வாறாக அமெரிக்காவின் வேண்டுகோள்களை நிராகரிக்கும் பல பெரிய நாடுகள் உள்ள நிலையில் கனடாவை தன் நட்பு வட்டாரத்திற்கு கொண்டுவர முடியாது என்பதை அறிந்து கொண்ட ட்ரம்ப் எமது கனடா மீதும் அதன் பிரதமர் மீதும் கடுமையான விமர்சனங்களையும் எதிர் நடவடிக்கைகளையும் எதிர்வரும் நாட்களில் வைக்கலாம். அதனால் கனடாவின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு பல பாதிப்புக்களும் விளையலாம். எனவே இனிவரப்போகும் நாட்கள் அமெரிக்காவின் கோர முகம் இன்னும் மோசமாகக் கூடிய நாட்களாக இருக்கலாம் என்ற விடயத்தை கவலைக்குரிய ஒன்றாக இங்கு பதிவு செய்கின்றோம்.கனடா, இந்தியா, இலங்கை மற்றும் சில நாடுகள் எவ்வாறு அமெரிக்காவின் "அகோரத்தை" தணிக்கப்போகின்றன என்பதையும் நாம் கவனிப்போம்.

**Basement for Rent in Scarborough**

**Scarborough இல் Staines Road/Steeles Avenue சந்திப்புக்கு அருகில் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட Basement ஏப்ரல் 1ம் திகதி முதல் வாடகைக்கு உண்டு. ஒரு வாகன Parking. Washer & Dryer தனியாக வழங்கப்படும். TTC பஸ் ஏறும் இடம் வீட்டிற்கு முன்பாக. தொடர்புகளுக்கு: 416 728 2281**

**Room for rent**

**Room for rent close to TTC on Morningside and Old Finch, utilities included. close to Malls. No parking. Looking to rent immediately. Call 416-471-6815**



# இலங்கை கடற்படையினர் கச்சதீவில் தமிழக இளைஞர்களை தாக்கினர் என தமிழகத்திலிருந்து கிடைத்துள்ள குற்றச்சாட்டு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கச்சதீவு திருவிழாவின்போது இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர் தமிழக பக்தர்களை தாக்கினார். இதன்போது தமிழக இளைஞர்கள் தரையில் இருந்து "இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும், குறித்த கடற்படை அதிகாரியை தண்டிக்க வேண்டும்" என எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்தனர். அதன்பின்னர் கடற்படை உயர் அதிகாரி ஒருவர் வந்து மக்களை சமாதானம் செய்ததாக தமிழக, கச்சதீவு பாரம்பரிய திருப்பயண குழு ஒருங்கிணைப்பாளர் சே.நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

கச்சதீவு திருவிழா குறித்து அவர் கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் தெரியவருகையில், நாங்கள் ஆரம்பத்தில் கச்சதீவுக்குள் உள்நுளையும் போது அங்கிருந்த கடற்படை மற்றும் பொலிசார் வரம்பு மீறி செய்யப்பட்டனர். கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தினார்கள். இதன் போது எனக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலை கூட ஏற்பட்டது.

இதன்போது இந்திய தூதரகத்துடன் நான் பேச முயற்சித்தாலும் பின்னர் அங்கிருந்த சூழ்நிலையும், ஏனையோரது நிலையையும் கருத்தில் கொண்டு சமாளித்துக் கொண்டு உள்ளே சென்றோம். திரும்பி வரும்போதும் அதே மாதிரியான சூழ்நிலையே ஏற்பட்டது. அங்கிருந்த சிறு வயதுடைய கடற்படை அதிகாரி ஒருவர் தமிழக இளைஞர்களுடன் மோதலில் ஈடுபடுவது போன்ற நிலையை கடைப்பிடித்தார்.

பலர் மயக்கமுறுகின்றார்கள், மூச்சு திணறல் ஏற்படுகின்றது எனவே மக்களை சிறிது நேரம் கடற்கரையில் பரவலாக அமர்ந்திருப்பதற்கு அனுமதிக்குமாறு இளைஞர்கள் கடற்படையிடம் கோரியவேளை இந்த முரண்பாடு ஏற்பட்டது. இதன்போது வயதில் குறைந்த கடற்படை அதிகாரி ஒருவர் இளைஞர்களை தாக்கினார்.

பின்னர் இளைஞர்கள் எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் அங்கு வந்த கடற்படை உயர் அதிகாரி ஒருவர் நிலைமையை சமாளித்து மக்களை கடற்கரையில் உட்கார அனுமதித்தார்.

கச்சதீவு திருவிழாவானது வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இருப்பினும் சில குளறுபடிகள் அதில் இருக்கத்தான் செய்கின்றன.

இந்திய பக்தர்கள் உள்நுழையும்போது அங்கே நான்கு வழிகளே காணப்படுகின்றன. அங்கே பெருமளவான கூட்டம் வரும்போது அதனை சமாளிக்க கூடிய நிலைமை காணப்படவில்லை.

திருவிழா முடிந்து திரும்பும் போதும் பிரச்சினை ஏற்பட்டது. திருவிழாவிற்கு வந்த அதிகாரிகள், விருந்தினர்கள் என அனைவரும் செல்லும்வரை மக்கள் அங்கே ஓரிடத்தில் மறித்து வைக்கப்படுகின்றனர். அவர்கள் கடற்படையினர் மற்றும் பாதுகாப்பு பிரிவினரின் கப்பல்களில் திரும்பி செல்கின்றனர். ஆகையால் அவர்களின் பாதுகாப்பு கருதியே மக்கள் இவ்வாறு மறித்து வைக்கப்படுகின்றனர். இதனால் 10 தொடக்கம் 12 மணிவரை மக்கள் கடுமையான வெயிலில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

12 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஒரே இடத்தில் மணிக்கணக்காக இருக்கும்போது அங்கு காற்று வசதியும் இல்லாத காரணத்தினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது இருப்பினும் தெய்வாதீனமாக உயிரிழப்பு ஏற்படவில்லை.



மீள்திரும்பும் போது 12 மணிவரை தடுத்து வைக்கின்ற அந்த முறையை சற்று பரிசீலனை செய்ய வேண்டும். அதேபோல இந்திய மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் தனித்தனியாக வழியை பிரித்து விட்டால் அவர்கள் அவர்களது பாதையில் இலகுவாக செல்வார்கள்.

இந்த விடயத்தில் இந்திய அரசும் இலங்கையின் வெளியுறவுத் துறையும் கரிசினை செலுத்தி, அடுத்த ஆண்டு இதே பிரச்சினை நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவை அனைத்தும் நிர்வாக பிரச்சினையாகவே காணப்படுகிறது. எதிர்காலத்தில் இந்த திருவிழாவை ஏற்பாடு செய்யும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏற்பாட்டுக் குழுவானது நிர்வாக முறைகளை சீர் செய்ய வேண்டும் என்றார்.

# ஈழத்துப் பத்திரிகையாளர் மறைந்த பாரதி அவர்களின் நினைவேந்தலில் ஊடகவியலாளர்கள் "கொலைகளை விசாரிக்க" ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது

இலங்கையில் அனைத்து இனக்குழுக்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கும் எதிரான கொலைகள் மற்றும் குற்றங்களை விசாரிக்க ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைக்க வேண்டுமென அங்கு உரையாற்றிய முக்கிய அரசியலவாதிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

"இந்த தமிழ் பேசும் சமூகங்களின் விடிவு நோக்கிய பயணத்தில் இவர்களின் (ஊடகவியலாளர்களின்) பங்களிப்பை மறக்க முடியாது. அதேநேரம் அக்கிரமமாக உயிர் பறிக்கப்பட்ட ஏராளமான ஊடகவியலாளர்கள் பற்றி இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு என்ன செய்யலாம் என நினைக்கும்போது ஒன்றை மாத்திரம் சொல்ல வேண்டும். பத்திரிகை நிறுவனங்களும், அரசியல்வாதிகளும் எத்தனையோ ஆணைக்குழுக்களை அமைத்துவிட்டார்கள். ஊடகவியலாளர்களுக்கு நடந்த கொடூரங்களை விசாரிக்க ஒரு ஆணைக்குழு வேண்டும். தனியாக அதற்கென அமைக்கப்பட வேண்டும்."

இந்த நாட்டின் இனப் பிரச்சினையில் மிகப்பெரிய குற்றங்களில் ஒன்றாக ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதைக் கருத வேண்டுமென, ஒரு வருடத்திற்கு முன்னர் உடல்நலக்குறைவால் காலமான மூத்த தமிழ் ஊடகவியலாளர் ராஜநாயகம் பாரதியின் நினைவாக வெள்ளவத்தை தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் உரையாற்றிய, பலர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

நான்கு தசாப்தங்களாக ஊடகத்துறையில் செயற்பட்ட பாரதி, 2025 பெப்ரவரி தனது 63 வயதில் காலமானார்.

யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட ஈழமுரசு பத்திரிகையின் மூலம் ஊடகத்துறைக்குள் நுழைந்த அவர், முரசொலி மற்றும் ஈழ நாடு ஆகியவற்றில் பணியாற்றியதோடு, தினக்குரல் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளில் உயர் பதவிகளை வகித்தார். அவர் இறக்கும் போது யாழ்ப்பாண "வீரகேசரி" பத்திரிகையின் பொறுப்பாசிரியராக இருந்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மேலதிகமாக, போரின் போது கொழும்பு பெருநகரப் பகுதியில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் காணாமல் ஆக்கப்பட்டமை, கொலை செய்யப்பட்டமை மற்றும் அடக்குமுறைக்கு எதிராக ஊடக உரிமைகளுக்காகப் போராடிய ஒரு ஊடகவியலாளராக ராஜநாயகம் பாரதி அறியப்படுகிறார்.

கடந்த இரண்டு வருடங்களில் ஊடகவியலாளர்கள் அதிக எண்ணிக்கையில் கொல்லப்பட்ட நாடாக பாலஸ்தீனம் பதிவாகியுள்ளதாகவும், ஆனால் அதற்கு





முன்னர் இலங்கை அந்த சாதனையைப் படைத்திருந்ததாகவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.



"கடந்த இரண்டு வருடங்களில் பலஸ்தீனத்தில்தான் அதிகளவு ஊடகவியலாளர்கள் பலியாகியுள்ளனர். ஆனால் அதற்கு முன்னர் சர்வதேச ரீதியில் முதல் இடத்தில் இருந்த ஒரு நாடு இலங்கை. எனவே ஊடகவியலாளர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டது தொடர்பாக ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும்."

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்தில், 44 ஊடகவியலாளர்கள் கொலைகள் மற்றும் கடத்தல்கள் உட்பட துன்புறுத்தலுக்கு உள்ளானதாக இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் தொகுத்த அறிக்கை காட்டுகிறது.

அவர்களில் பெரும்பாலோர் வடக்கித் தமிழ் ஊடகவியலாளர்கள். அவர்களில் எவருக்கும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமைய விசாரிக்க ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிப்படுவதன் மூலம், கொலைகளுக்குப் பின்னால் உள்ள சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவதன் மூலம் ஒரு புதிய வரலாற்றை எழுத முடியும் என வேறு சில பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

"இன்று உளவுத்துறையின் பிரதான அதிகாரிகள் எல்லாம் கைது செய்யப்படுகின்றார்கள். இதற்கு பின்னால் என்னென்ன சதிகள் எல்லாம் நடந்தன என்றெல்லாம் விசாரணைகள் எல்லாம் நடைபெறுகின்ற அதேநேரம், ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு பின்னால் என்ன நடந்தது எனப் பார்க்கின்ற அதேநேரம், இந்த நான்கு, ஐந்து தசாப்தங்களாக பலியான ஊடகவியலாளர்கள் குறித்த ஒரு ஆணைக்கழு அமைவது இன்றியமையாதது - அவசியமானது. அதன் மூலம் மிகப்பெரும் சரித்திரம் எழுதப்படும். அதற்கு பின்னால் இருக்கின்ற சதிகள் அம்பலத்திற்கு வரும்."

இவ்வாறு அன்றைய பத்திரிகையாளர் பாரதி அவர்களின் நினைவு நாளில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களுக்காக பல பத்திரிகையாளர் குரலை எழுப்பியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

2024 ஒக்டோபரில், அப்போதைய அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத், ஊடகவியலாளர்களான லசந்த விக்ரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் கொலைகள் உட்பட 'emblematic case' என அழைக்கப்படும் பல வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருவதாகவும், ஆனால் அரசாங்கமோ அல்லது பொலிஸார் உள்ளிட்ட அரச புலனாய்வு அமைப்புகளோ அந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தை பகிரங்கப்படுத்தவில்லை எனவும் கூறியிருந்தார்.

# மன்னார் மறைமாவட்ட ஆயரை சந்தித்த அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர்

(03-03-2026)



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும், அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரான அதி வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ க்கும் இடையில் 03-03-2026 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது. மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த அதி வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ மன்னார் மறைமாவட்ட ஆயருடன் கலந்துரையாடியுள்ளார். நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட நிலையில் மன்னார் மாவட்டத்தின் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள மிகத் தொன்மை மிக்க யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை விடுவிக்க, வடக்கிலிருந்து கோரிக்கை



வடக்கில் 36 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள, சுமார் இரண்டு நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட ஒரு கோயிலை முழுமையாக விடுவிக்குமாறு உள்ளூர் தமிழ் சைவர்கள் மீண்டும் ஒருமுறை பொறுப்பான அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலையத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாணம், வலிகாமம், ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் செல்லும் பாரம்பரிய பாதையை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள இலங்கை இராணுவம், தமிழர்களின் தனியார் காணியை தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்கிலேயே மாற்றுப் பாதையை விரிவுபடுத்தும் பணியை ஆரம்பித்துள்ளதாக உள்ளூர்வாசிகள் நம்புகின்றனர்.

தனியார் காணி ஊடாக ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் செல்ல இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீதியை அகலப்படுத்தும் முயற்சி, உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பினை அடுத்து இராணுவத்தால் கைவிடப்பட்டுள்ளது.

இராஜேஸ்வரி அம்மன் கோயிலும் அதன் சுற்றுப்புறப் பகுதியும் ஜூன் 15, 1990 அன்று உயர் பாதுகாப்பு வலையமாக அறிவிக்கப்பட்டது. மே 2002 முதல், விசேட அனுமதியின் பின்னர், ஒரு சிலருக்கு மாத்திரம் கோயிலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

போர் தீவிரமடைந்ததால், ஜூன் 2006 இல் அந்த அனுமதியும் நிறுத்தப்பட்டதோடு, நல்லாட்சி அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சரான விஜயகலா மகேஸ்வரன், ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் முதல் முறையாக உள்ளூர்வாசிகளுடன் கோயிலுக்குச் சென்றார்.

பெப்ரவரி 3, 2015, மகா சிவராத்திரி முதல், இராணுவ அனுமதி பெற்றவர்கள் மாத்திரமே கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டதாக, ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலய நிர்வாகக் குழு கூறுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில், ஜூன் 24, 2023 அன்று வடக்கில் 234 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டதை ஒட்டி, சைவர்கள் மீண்டும் ஆலயத்தில் வழிபட அனுமதிக்கப்பட்டனர். எனினும் காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரை என்ற நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

கோயிலுக்குச் செல்லும் பாரம்பரிய பாதையை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட, விவசாய நிலங்கள் உட்பட தமிழ் மக்களின் தனியார் காணிகளில் ஆலயத்திற்குச் செல்வதற்கான தற்காலிக பாதை அமைக்கப்பட்டதாக பிரதேசத்தின் குடிமக்கள சமூக அமைப்புப் பிரதிநிதிகள் வலியுறுத்துகின்றனர்.

கோயிலுக்குச் செல்லும் பாரம்பரிய பாதையையும் அதைச் சுற்றியுள்ள பல ஏக்கர் நிலத்தையும் இராணுவம் இன்னும் கட்டுப்பாட்டில் அவைத்துள்ளதாகவும், தமிழ் மக்களின் தனியார் நிலங்கள் வழியாக கோயிலுக்குச் செல்லும் தற்காலிக பாதையை நிரந்தர பாதையாக மாற்றும் நோக்கத்துடன் பெப்ரவரி 16 ஆம் திகதி பணியை ஆரம்பித்த இராணுவம், உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பையடுத்து கைவிட்டதாக, வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவிக்கின்றார்.

இராணுவத்தின் முயற்சிகள் குறித்து தெல்லிப்பழை பிரதேச செயலகம் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய பிரதேச சபைத் தலைவர், கோயிலுக்குச் செல்லும் பாரம்பரிய பாதைக்கு அருகில் தற்போது இராணுவ முகாம் இல்லாவிட்டாலும், இராணுவ வாகன பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று இன்னும் அந்த இடத்தில் காணப்படுவதாகவும் வலியுறுத்துகிறார்.

வாகன பழுதுபார்க்கும் நிலையத்தை உடனடியாக அகற்றவும், இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் செல்லும் பழைய வீதியை பக்தர்களுக்காகத் திறக்கவும், கோயிலுக்குச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குமாறும் பிரதேசத்தின் தமிழ் சைவர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் மக்களின் விவசாய நிலங்கள் வழியாக இராணுவத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக வீதிக்கு பதிலாக, கோயிலுக்கு செல்லும் பழைய வீதியை விடுவிக்க வேண்டுமென வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்த்குமார் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

“மக்களின் காணியில் பாதி இராணுவத்தின் கீழ் உள்ளது. அவர்கள் இந்த விவசாய காணிகள் வழியாக ஒரு வீதியை அமைத்து, மக்கள் அதை மீண்டும் பயன்படுத்த அனுமதிக்கின்றனர், இது கோவிலுக்கு செல்லும் பழைய வீதி விடுவிக்கப்படுவதைத் தடுக்கும் முயற்சியாகும். அதாவது அவர்கள் வீதியை மாற்றுகிறார்கள். அவர்கள் இந்த தற்காலிக வீதியை அமைக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் மக்கள் பழைய வீதியை கோருகின்றனர். பழைய வீதியை நிச்சயமாக விடுவிக்க வேண்டும்.”

இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீதியால் சில தனியார் காணிகள் பிரிக்கப்பட்டுள்ளதாக பொது பிரதிநிதிகள் கூறுகின்றனர். மேலும், தற்காலிக வீதியை நிரந்தரமாக மாறினால், மக்கள் தமது காணி மீதான உரிமையை இழக்க நேரிடும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.




Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
We are accepting CDCP insurance.



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

உலக செய்திகள்
World News



# பிரதமர் மோடியின் பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான "டெல்லியின் முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அனுபவித்த அநியாய 170 நாட்கள் சிறைவாசம் — இறுதியில் ஆதாரமற்றது என நிரூபணம்!"

டெல்லியின் முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் முதல்வராக இருந்த காலத்தில் மதுபான உரிமை-களை வழங்கியதில் சில நிறுவனங்களுக்கு சாதகமாக செயல்பட்டு, அதன் மூலம் பெறப்பட்ட லஞ்சத்தை தேர்தலுக்கு பயன்படுத்தியதாக அமலாக்கத்துறை குற்றச்சாட்டுடன் கைது செய்யப்பட்டார். 170 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

நீதிமன்றம் சிபிஐ தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை ஆய்வு செய்து, அதை "கற்பனைக்கதை" என விமர்சித்தது. நீதிபதி ஜித்தேந்திர் சிங் கூறிய-தாவது: "கோப்புகளை தேடியும், குற்றச்சாட்டுகளுக்கான சிறு துளி ஆதாரத்தையும் சிபிஐ சமர்ப்பிக்கவில்லை."

விசாரணை அமைப்புகள் நடுநிலையாக செயல்படாமல், முன்கூட்டியே "கெஜ்ரிவாலைக் குற்றவாளியாக்க வேண்டும்" என முடிவு செய்து வழக்கை நகர்த்தியுள்ளதாகவும் நீதிமன்றம் வெளிப்படுத்தியது.

அரசியல் அடிப்படையில் எடுத்த அரசு முடிவுகளை ஊழல் என்று குறித்துக் கொண்டு ஒருவரை சிறையில் அடைப்பது சட்டத்திற்கு புறம்பானது. சாட்சிகள் வாக்குமூலங்களை சிபிஐ சாதகமாக மாற்றியதும் நீதிமன்றம் கண்டெடுத்தது.

நீதிமன்றம் சிபிஐ அதிகாரியிடம் துறை ரீதியான விசாரணை நடத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அரவிந்த் கெஜ்ரிவால் - அறிவு நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர். அவரது தந்தை, தாய் முன்னாள் ஐ.ஆர்.எஸ் அதிகாரிகள். மகள் மகளிர் இருவரும் IIT பட்டதாரிகள். கெஜ்ரிவால் "அன்னா ஹசாரே" உடன் இணைந்து ஊழலுக்கு எதிரான இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

"அரசியலைத் தூய்மைப்படுத்த, அரசியலுக்குள்ளேயே செல்ல வேண்டும்" என்று, 2012-ல் ஆம் ஆத்மி கட்சியை துவக்கினார். டெல்லியின் முதல்வராக மூன்று முறை பதவி வகித்தார்.

நீண்ட சிறைவாசம் அனுபவித்த பிறகு, இன்று அவரை விடுவித்தாலும் - அந்த விடுதலை வெறும் சட்டபூர்வமான காகிதம் மட்டுமே. சிறையில் கழித்த இரவுகள், இழந்த நிம்மதி, குடும்பம் அனுபவித்த அவமானம் - எந்த இழப்பீடும் அதற்குப் பதிலாக இல்லை.

ஒரு நேர்மையான மனிதரை ஊழல்வாதி என்று குற்றம்சாட்டி சிறைக்குள் தள்ளுவது - ஒருவருக்கான துரோகம் மட்டுமல்ல, நாட்டின் ஜனநாயகத்துக்கும் மனித நேயத்துக்கும் மீதும் கொடூரமான தாக்குதல்.

"அதிகாரம்" என்பது உண்மையை நிலைநாட்டதற்காக இருக்க வேண்டும் ஒருவரின் வாழ்க்கையை சிதைக்க அல்ல, - அரவிந்த் கெஜ்ரிவால் உருக்கமாக கூறினார்.

"என் வாழ்நாள் முழுவதும் நான் சம்பாதித்தது நேர்மை மட்டும்தான் இன்று கடவுள் நாங்கள் சரியானவர்கள் என்பதை நிரூபித்துவிட்டார்" என்று அவர் கண்ணீர் வழிந்து உருக்கம் தெரிவித்தார்.

# "பிரதமர் மவுனம் ஏன்?" — ஈரான் போர்க்கப்பல் தாக்குதல் விவகாரத்தில் ராகுல் காந்தி கடும் கண்டனம்



இந்தியாவில் இருந்து புறப்பட்ட ஈரானின் புதிய போர்க் கப்பலில் ஒன்றான ஐரிஸ் டெனா போர்க் கப்பலை இலங்கை கடற்பரப்புக்கு அருகே அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி அழித்தது. இதில் 87 பேர் பலியானார்கள். இதற்கு பிர-தமர் மோடி பதில் அளிக்காமல் மவுனமாக இருப்பது ஏன்? என்று நாடாளுமன்ற மக்களவை எதிர்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி கடும் கண்ட னம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பதிவ-ில் கூறி இருப்பதாவது: உலகம் தற்போது மிகுந்த அசாதாரணமும், பதட்டமும் நிறைந்த காலக்கட்டத்தில் இருக்கிறது. கடுமையான சூழ்நிலைகள் நமது முன்பு காத்திருக்கின்றன. இந்தியாவின் எண்ணெய் விநியோகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. நமது எண்ணெய் இறக்குமதியில் 40 சதவீதத்துக்கும் அதி-கமானவை ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக செல்கின்றன. எல்.பி.ஜி. மற்றும் எல்.என்.ஜி. விநியோக நிலை இன்னும் மோசமாக உள்ளது. இந்த மோதல் நமது அருகிலேயே வந்துவிட்டது. இந்தியப் பெருங்கடலில் ஒரு ஈரான் போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பிரதமர் இதுகுறித்து எதுவும் சொல்லவில்லை. இதுபோன்ற ஒரு தருணத்தில் நமக்கு உறுதியான மற்றும் நிதானமான தலைமை-யே தேவை. அதற்கு பதிலாக நம்முடைய சுய தன்மையை விட்டுக் கொடுத்த ஒரு சமரச பிரதமரையே இந்தியா பெற்றுள்ளது. இவ்வாறு ராகுல் காந்தி கூறியுள்ளார்.

# பிரதமர் மோடி — பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் சந்திப்பு

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்ற பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் 4 நாள் பயணமாக இந்தியா வந்தார். டில்லி பாலம் விமான நிலையத்திற்கு தனி விமானத்தில் வந்த பின்லாந்து அதிபரை, வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் வரவேற்றார்.

இந்நிலையில், பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப், பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில், இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதுவது வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# நிதிஷ் குமார் வேட்புமனு தாக்கல்



பீகார் முதலமைச்சராக பெறுப்பேற்ற 4 மாதங்களே ஆன நிலையில் பதவியில் இருந்து விலகுவதை நிதிஷ் குமார் உறுதி செய்துள்ளார். ராஜினாமா செய்வதை உறுதி செய்த நிதிஷ் குமார் பீகாரின் புதிய அரசிற்கு அனைத்து விதத்திலும் ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளார். முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்வதை உறுதி செய்த நிதிஷ் குமார் முழு மனதுடன் பீகார் மக்களுக்கு பணியாற்றியதாக உருக்கமாக தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு தேர்தலில் என்டிஏ கூட்டணியில் வென்ற நிதிஷ்குமார் பீகார் முதலமைச்சராக 10வது முறையாக பொறுப்பேற்றார்.

முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தபின் நிதிஷ் குமார் பதிவு வெளியிட்டுள்ளார். அதில், "தொடக்கத்தில் இருந்தே சட்டமன்ற, நாடாளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினர் ஆக வேண்டும் என்ற ஆசை என் மனதில் இருந்தது. எனவே இம்முறை மாநிலங்களவை உறுப்பினராக விரும்புகிறேன்" என்றார். இந்நிலையில், அமித்ஷா, நிதின் நபின் முன்னிலையில் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட நிதிஷ் குமார் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

# அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல்களால் ஈரானில் மக்கள் பலியான எண்ணிக்கை 1,045 ஆக உயர்வு



ஈரானில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் கூட்டாக நடத்தி வரும் தாக்குதல் 5-வது நாளை எட்டியது. வளைகுடா பிராந்தியம் முழுவதும் விரிவடைந்துள்ள இந்த போரில் ஈரானில் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலிகாமேனி உள்பட ஏராளமானோர் கொல்லப்பட்டு உள்ளனர். மிகவும் தீவிரமாக நடந்து வரும் இந்த போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,000-ஐ கடந்து விட்டது. அதன்படி நாடு முழுவதும் இதுவரை 1,045 பேர் கொல்லப்பட்டு இருப்பதாக அந்த நாட்டு அரசு நிறுவனம் தெரிவித்து உள்ளது. இவை அடையாளம் காணப்பட்டு அடக்கத்துக்கு தயாராக உள்ள உடல்களின் எண்ணிக்கை என ஈரானின் தியாகிகள் மற்றும் படைவீரர்கள் நலனுக்கான அந்த நிறுவனம் கூறியிருந்தது.

# இஸ்ரேலுடனான அமெரிக்காவின் கூட்டு வான்வழித் தாக்குதல் தொடரும் என ட்ரம்பின் முரணான அறிவிப்பு



அமெரிக்க அதிபர் டிரம்ப் அளித்த பேட்டியில் கூறியதாவது: நாங்கள் போர் முனையில் சிறப்பாக செயல்படுகிறோம். 10 மதிப்பெண்ணுக்கு 15 மதிப்பெண் பெற்றது போல் சிறப்பான நிலையில் இருக்கிறோம். நாங்கள் இப்போது மிகவும் வலுவான நிலையில் இருக்கிறோம். ஈரானின் தலைமை வேகமாக சிதறி வருகிறது. அங்கு ஒரு தலைவராக இருக்க விரும்பும் அனைவரும் இறந்து விடுகிறார்கள். ஈரா-னின் பாலிஸ்டிக் (கண்டம் விட்டு கண்டம் பாயும்) ஏவுகணைகளின் ஆயுதக் கிடங்கு விரைவாக அழிக்கப்பட்டு வருகிறது. பைத்தியக்காரர்கள் அணு ஆயுதங்களை வைத்திருக்கும் போது கெட்ட விஷயங்கள் நடக்கும். இஸ்ரேலுடனான அமெரிக்காவின் கூட்டு வான்வழித் தாக்குதல் தொடரும் என்றார்.

# ஈரான் குண்டு வீச்சில் மேலும் 2 இந்தியர்கள் மரணம்

ஈரான் உச்சபட்ச தலைவராக இருந்த அயதுல்லா அலி காமேனி, அமெரிக்கா, இஸ்ரேல் நடத்திய கூட்டு தாக்குத லில் கடந்த 28-ந்தேதி கொல்லப்பட்டார். உலகம் முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை தொடர்ந்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் கடுமையான பதிலடியை கொடுத்து வருகிறது. ஈரான நேரடியாக தாக்கி வரும் அமெரிக்காவும். இஸ்ரேலும் அந்த நாட்டு கடற்படை கப்பல்களையும் தாக்கி அழித்து வருகின்றன. இந்த நிலையில் ஈரான் குண்டு வீச்சில் கப்பல் தீப்பற்றியதில் காணமல்போன இந்தியர்கள் 2 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஹோர்முஸ் நீர-ினை அருகே ஸ்கைலட் கப்பல் மீது மார்ச் 1-ம் தேதி குண்டு வீசியது. ஈரான். கப்பல் தீப்பற்றி எரிந்ததில் ஒரு இந்தியர் இறந்தநிலையில் கேப்டன் அஷிஷ் குமார் உள்பட இருவர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது. தற்போது இருவரும் உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# காணாமல் போன யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் தொடர்பில் பொறுப்புடன் செயல்படுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கடற்தொழில் அமைச்சரிடம் வேண்டுகோள்!

யாழ். காங்கேசன்துறை ஊரணி கடலில் இருந்து மீன்பிடிக்கச் சென்று இரு மீனவர்கள் ஆறு நாட்களாகியும் கரை திரும்பாத நிலையில் அவர்களின் நிலைமை தொடர்பில் உரிய கவனம் செலுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் கடத்தொழில் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தார்.

4ம் திகதி அன்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த இரு மீனவர்களும் காணாமல் போய் ஆறு நாட்கள் கடக்கின்ற நிலையில் அவர்களின் குடும்பங்கள் மிகவும் வேதனையுடன் காணப்படுகிறார்கள்.

தமது மீனவர்கள் காணாமல் போனமை தொடர்பில் கடற்படையினருக்கும் பொலிசாருக்கும் அமைச்சராகிய உங்களுக்கும் ஏற்கனவே தகவல் வழங்கி உள்ள நிலையில் அவர்களின் நிலைமை தொடர்பில் இதுவரை அவர்களின் குடும்பங்களுக்கு அறிவிக்காமை மன வருத்தத்தை தருகிறது.



கடலில் அவர்கள் திசைமாறி சென்று கொண்டிருப்பதாகவும் அவர்களை தாங்கள் கண்டதாகவும் இந்திய மீனவர்கள் காங்கேசன் துறை மீனவர்களிடம் கூறிய ஒளிப்பதிவும் இருக்கின்ற நிலையில் நீங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏற்க முடியாத விடயம்.

ஆகவே கடலில் காணாமல் போன மீனவர்கள் தொடர்பிலும் அவர்களின் குடும்பத்தின் நிலைமை தொடர்பிலும் கரிசனை கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



# அமெரிக்காவின் "கொலைவெறித் தாக்குதல்" காரணமாக இலங்கைக் கடலில் பலியான 84 ஈரானிய கடற்படையினர்!

## மனித நேயத்தைக் காட்டி நிற்கும் இலங்கையும் இந்தியாவும்!

**தாக்குதலுக்கு உள்ளான கப்பலிலிருந்து 32 ஈரானியர்கள் உயிருடன் மீட்கப்பட்டு காலி வைத்தியசாலையில் அனுமதி!.**

**மற்றுமோர் ஈரானிய கப்பலில் 300 300 படையினருக்கு உணவு, நீர் உதவி தேவை எனக் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் உதவியை வழங்க இந்தியா முன் வந்துள்ளது!**

---

**ந.லோகதயாளன்.**

காலிக் கடலில் உயிரிழந்த ஈரானிய கடற்படையினரின் உடல்களை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலித்துறைமுகத்தில் இருந்து 40 கடல்மைல் தொலைவில் பயணித்த ஈரானிய கப்பல் மீது அமெரிக்க கப்பல் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்த 84 ஈரானியர்களின் உடல்களை இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்ட உடல்கள் காலி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட 84 உடல்களும் இன்று உடற்கூற்று பரிசோதணைக்கு உட்படுத்தப்படவுள்ளது. பரிசோதணையின் பின்னர் ஈராணிய அரசிடம் ஒப்படைக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேநேரம் இக் கப்பலில் இருந்து 32 ஈரானியர்கள் உயிருடன் மீட்கப்பட்டு காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



தகர்த்து மீழ்கப்படிக்கப்பட்ட கப்பலில் 180 பேர் பயணித்ததாக முன்னர் செய்திகள் வெளியானபோதும் அக் கப்பலில் 132 பேரே பயணித்தனர் என தற்போது கூறப்படுகின்றது.

இதேநேரம் ஈராணின் மற்றுமோர் கப்பலில் 300 பேர் உள்ளதாகவும் அவர்களிற்கு உணவு, நீர் உதவி தேவை எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த உதவியை வழங்க இந்தியா முன் வந்துள்ளது.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# விளிம்பில் மத்திய கிழக்கு: தீவிரமடையும் அமெரிக்கா — ஈரான் — இஸ்ரேல் மோதலும் உலகளாவிய தாக்கமும்

## மத்திய கிழக்கு முழுவதும் வேகமாக விரிவடைந்து வரும் மோதல் குறித்த ஆழமான புவிசார் அரசியல் மற்றும் இராணுவ ஆய்வு

பெரும் போரை நோக்கி நகரும் பிராந்தியம்

மத்திய கிழக்கு நாடுகள் 21-ஆம் நூற்றாண்டின் மிகவும் ஆபத்தான புவிசார் அரசியல் கட்டத்திற்குள் நுழைந்துள்ளன. ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையிலான மோதல் கடந்த சில நாட்களில் வியத்தகு அளவில் தீவிரமடைந்துள்ளது. ஏவுகணைத் தாக்குதல்கள், கடற்படைத் தாக்குதல்கள், நாசவேலைகள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் என பல நாடுகளுக்கு போர் பரவி வருகிறது.
ஆரம்பத்தில் வரையறுக்கப்பட்ட இராணுவ மோதலாகத் தொடங்கிய இந்த நிலைமை, தற்போது பாரசீக வளைகுடா மற்றும் அரபிக்கடல் முதல் லெபனான், ஈராக் மற்றும் இஸ்ரேல் வரை விரிந்து, பன்முனைப் பிராந்திய மோதலாக உருவெடுத்துள்ளது. இந்தச் சூழல் உலகளாவிய எண்ணெய் சந்தைகள், சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதைகள் மற்றும் மத்திய கிழக்கின் மூலோபாய அதிகார சமநிலையை நேரடியாகப் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் மீதான தாக்குதல் குறித்த ஈரானின் உரிமைக் கோரல்

ஈரானிய அரசு ஊடகங்கள் அமெரிக்காவின் விமானம் தாங்கி கப்பலான **USS Abraham Lincoln (CVN-72)** மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவித்துள்ளது. இந்த தகவல் தற்போதைய மோதலின் மிக முக்கியமான திருப்புமுனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
இஸ்லாமிய புரட்சிகர காவல்படை **Islamic Revolutionary Guard Corps (IRGC)** கடற்படை பிரிவின் கூற்றுப்படி, அரபிக்கடலில் வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்புக் கப்பல்களுடன் செயல்பட்டுக் கொண்டிருந்த அந்த விமானம் தாங்கிக் கப்பலை ஈரானிய ஆளில்லா விமானங்கள் **(drones)** இலக்காகக் கொண்டு தாக்கியதாக கூறப்படுகிறது.
ஈரானிய கடற்படை நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக இந்த கப்பல் குழு ஜனவரி மாதம் முதல் அந்தப் பிராந்தியத்தில் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதல் உறுதிப்படுத்தப்பட்டால், நவீன இராணுவ வரலாற்றில் ஈரானுக்கும் அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பலுக்கும் இடையிலான மிக நேரடி மோதல்களில் ஒன்றாக இது அமையும்.

ஈரானிய போர்க்கப்பல் ஐ.ஆர்.ஐ.எஸ் டேனா மூழ்கடிக்கப்பட்டது

இந்தியப் பெருங்கடலில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நடத்திய தாக்குதலில் ஈரானிய போர்க்கப்பலான ஐசுஐளு னுநயெ மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் தகவல் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.
ஈரானிய எல்லையிலிருந்து சுமார் 2,000 மைல்கள் தொலைவில் இந்தத் தாக்குதல் நடைபெற்றதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரு நீர்மூழ்கிக் கப்பல் நேரடியாக ஒரு போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்த அரிதான சம்பவங்களில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது.
இந்தச் சம்பவத்தை ஈரான் "கடலில் நிகழ்ந்த கொடூரம்" என்று கடுமையாக கண்டித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் பென் குரியன் விமான நிலையம் மீதான ஏவுகணைத் தாக்குதல்கள்

அதே நேரத்தில், ஈரான் தனது இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்தி இஸ்ரேலின் முக்கிய மூலோபாய இலக்குகளை நோக்கி கோர்ராம்ஷஹ்ர்-4 **(Khorramshahr-4)** வகை பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியுள்ளது.

இலக்காகக் கூறப்படும் இடங்கள்:

- **Ben Gurion Airport**
- டெல் அவிவ் அருகிலுள்ள இஸ்ரேலிய விமானப்படை தளங்கள்

இந்த ஏவுகணைகள் சுமார் 2,000 கிலோமீட்டர் தூரம் பாயக்கூடியவை. மேலும், ஒரு டன்னுக்கும் அதிகமான வெடிமருந்துகளைச் சுமந்து செல்லக்கூடிய திறன் கொண்டதாகக் கருதப்படுகிறது.
இந்தத் தாக்குதல்கள் ஈரானின் உண்மையான வாக்குறுதி நடவடிக்கை 4 **("Operation True Promise 4")** எனப்படும் இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டிமோனா அணு நிலையம் குறித்த எச்சரிக்கை

இஸ்ரேலின் டிமோனா பகுதியில் அமைந்துள்ள சிமோன் பெரஸ் நெகேவ் அணு ஆராய்ச்சி மையம் **(Shimon Peres Negev Nuclear Research Center)** எதிர்காலத்தில் இலக்காக மாறக்கூடும் என ஈரானிய இராணுவ அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.
இந்த தளம் இஸ்ரேலின் அணு தடுப்பு திறனின் மையமாக இருப்பதாக பல நிபுணர்கள் கருதுகின்றனர்.


டிமோனா மீது ஏதேனும் வெற்றிகரமான தாக்குதல் நடைபெற்றால்:

-கதிரியக்க கசிவு
-சுற்றுச்சூழல் பேரழிவு
-பிராந்திய அளவிலான அணு நெருக்கடி

போன்ற விளைவுகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

எரிசக்தி உள்கட்டமைப்புகள் குறிவைக்கப்படுகின்றன
மத்திய கிழக்கின் முக்கிய எரிசக்தி தளங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் உலகப் பொருளாதாரத்தை அதிர்ச்சியடையச் செய்கின்றன.




பஹ்ரைன் பெட்ரோலியம் நிறுவனம் **(Bahrain Petroleum Company)** இயக்கும் சித்ரா **(Sitra)** சுத்திகரிப்பு நிலையம் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
மேலும் சவூதி அரேபியா நாட்டில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி முனையங்களில் ஒன்றான ராஸ் தனுரா சுத்திகரிப்பு நிலையமும் இலக்காக வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

ஹார்முஸ் நீரிணை நெருக்கடி

உலகின் சுமார் 20% எண்ணெய் போக்குவரத்து நடைபெறும் ஹார்முஸ் நீரிணை **(Strait of Hormuz)** வழியாக சீனக் கப்பல்களை மட்டுமே பாதுகாப்பாக அனுமதிக்கப் போவதாக ஈரான் அறிவித்துள்ளது.
இந்த அறிவிப்பு, அந்த நீரிணையை சர்வதேச கடற்படை மோதலுக்கான சாத்தியமான போர்க்களமாக மாற்றியுள்ளது.

விரிவடையும் முனைகள்: லெபனான் மற்றும் ஈராக்

ஹிஸ்புல்லாஹ் **(Hezbollah)** அமைப்பு இஸ்ரேலிய பாதுகாப்பு உள்கட்டமைப்புகளை நோக்கி ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.
அதேவேளை ஈராக்கில் உள்ள ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்கள், எர்பில் பகுதியில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்த மோதலின்போது அமெரிக்காவின் ஆளு-9 சுநயிநச ஆளில்லா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

உலகளாவிய எண்ணெய் சந்தையில் அதிர்ச்சி

இந்த மோதலின் விளைவாக உலகளாவிய எண்ணெய் விலைகள் 14 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளன. வளைகுடா கடற்பாதைகளில் சுமார் 200 வர்த்தகக் கப்பல்கள் பாதுகாப்பு அச்சம் காரணமாகத் தங்கியுள்ளன. காஸ்கோ **(COSCO)** போன்ற பெரிய கப்பல் நிறுவனங்கள் காப்பீட்டுச் செலவுகள் அதிகரித்ததால் மற்றும் பாதுகாப்பு அச்சம் காரணமாக புதிய முன்பதிவுகளை நிறுத்தியுள்ளன.

உலகளாவிய ஸ்திரத்தன்மைக்கான ஆபத்தான தருணம்

இந்த மோதல் ஆரம்பத்தில் ஒரு பிராந்திய அரசியல் சிக்கலாகத் தோன்றினாலும், தற்போது அது உலகளாவிய அளவில் எரிசக்தி பாதுகாப்பு, கடல்சார் வர்த்தகப் பாதைகள் மற்றும் அணு அரசியல் சமநிலையை பாதிக்கும் ஒரு பெரிய பூகோள அதிர்வாக மாறியுள்ளது.
வரவிருக்கும் நாட்கள் இந்த நெருக்கடி ராஜதந்திர முயற்சிகளால் கட்டுப்படுத்தப்படுமா அல்லது ஒரு உலகளாவிய பெரும் யுத்தமாக வெடிக்குமா என்பதைத் தீர்மானிக்கக் கூடும்.

*எழுதியவர்: ஈழத்து நிலவன்*
*தமிழ் தேசிய வரலாற்று ஆய்வாளர் - உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ விவகார ஆய்வாளர்* ***06/03/2026***

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் பிரதம நீதியரசர் மன்னாரிற்கு விஜயம் செய்து நீதிமன்ற செயற்பாடுகளைப் பார்வையிட்டார்

மன்னார் நிருபர்



(03-03-2026)

இலங்கையின் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன உத்தியோகபூர்வ பயணமாக 3ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னாரிற்கு விஜயம் செய்தார்.

மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்டு வருகைதந்த பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மன்னார் நீதவான் நீதி மன்றத்திற்கு விஜயம் செய்தார்.

இதன் போது மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா, மன்னார் மாவட்ட நீதவான் ஐ.என்.றிஸ்வான், மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் எம்.எம்.எப். ஸஹ்ஹாரா மற்றும் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்து பிரதம நீதியரசரை வரவேற்றனர்.

அதனைத்தொடர்ந்து மன்னார் மேல் நீதிமன்ற கட்டிடத்தில் பிரதம நீதியரசர் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன் போது நீதிமன்ற செயல்பாடுகள் உள்ளடங்களாக பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

# மன்னாரில் சிறு சேமிப்பு மற்றும் கடன் சேவை வழங்கும் பெண்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து கவனயீர்ப்பு போராட்டம்

## அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (03-03-2026)

நிதி அமைச்சினால் முன்மொழியப்பட்ட நுண் நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்திற்கு அமைவாக உள்ளூரில் சுய தொழிலில் ஈடுபடும் குறிப்பாக சமூக மட்டத்தில் சிறு சேமிப்பு மற்றும் கடன் சேவை வழங்கும் பெண்களை குறித்த சட்டத்துக்குள் கொண்டு வருவதால் தமக்கு ஏற்படவுள்ள பாதிப்பு களை கருத்தில் கொண்டு அதற்கு எதிராக மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 3ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பதாதைகளில் கிராமிய சேமிப்பு திட்டங்களை அளித்து நிதி நிறுவனங்களுக்கும் வட்டிக்காரர்களுக்கும் வாய்ப் பளிக்காதே, இச்சட்டம் பெண்களை அடிமையாக்க நுண் நிதி நிறுவனங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது,இச்சட்டம் சுய உதவி குழுக்களின் சேமிப்புகளை ஆபத்திற்குள் தள்ளுகிறது,அவசர தேவைக்கு பணம் கிடைக்கும் ஒரே வழியான சமூக சேமிப்பு திட்டங்களை தடை செய்யாதே, நாங்கள் இச்சட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் ஏழைகள் சமூக மட்ட சேமிப்பு இல்லாமல் எதிர் கொள்ளப் போகும் அவல நிலையை மீள் பரிசீலனை செய்யுங்கள்" போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவர்களாக பெண்கள் காணப்பட்டனர்.

தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் ஊர்வலமாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலில் வைத்து ஜனாதிபதிக்கான மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் குறித்த மகஜரை உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

# பயங்கரவாதம் அற்ற சூழலில் இத்தகைய சட்டம் அவசியமற்றது என்பதால் மக்களை ஒடுக்கும் இத்தகைய சட்டத்தை அரசு கைவிட வேண்டும்

## மன்னாரில் ஊடக சந்திப்பில் தெரிவிப்பு



(28-02-2026)

பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டமூலத்தை நீக்கக்கோரி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஜார் பகுதியில் கடந்த 28ம் திகதி அன்றைய தினம் சனிக்கிழமை (28-02-2026) மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சம் பிகிராடோ தலைமையில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது சட்டத்தரணிகள், சமூக ஆர்வலர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் சட்டத்தரணி செல்வராசா டினேசன் ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

அவர்கள் கருத்து தெரிவிக்கையில், அன்றைய தினம் சமூக செயல்பாட்டாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஒட்டுமொத்த சமூகம் சேர்ந்து அரசாங்கத்திற்கு ஒரு செய்தியை கொண்டு செல்வதற்காக நாங்கள் தபாலட்டையில் கையொப்பம் சேகரித்தல் மற்றும் இந்த ஊடக சந்திப்பை முன்னெடுத்துள்ளோம்.

அந்த வகையில், உங்களுக்கு தெரியும் தற்பொழுது இலங்கையினுடைய பேசுபொருளாக காணப்படுகின்றது, இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாற்றீடான அல்லது பதிலீடான ஒரு சட்டமூலத்தை, அரசாங்கத்தை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதற்கான சட்டமூலம் தொடர்பாக மக்களுடைய கருத்துக்களை கேட்டறியும் ஒரு செயல்பாடானது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

நாங்கள் மக்களுடன் தொடர்ந்து பயணித்தவர்கள் என்ற அடிப்படையில், இது சம்பந்தமாக மக்களிடம் கொண்டு சேர்த்தவர்கள் என்ற அடிப்படையில், ஒட்டுமொத்த சமூகமும் இந்த பயங்கர வாத சட்டத்திற்கான மாற்றீடான சட்டத்திற்கு முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றார்கள் என்ற செய்தியை இந்த வேளையிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

ஏனென்று சொன்னால் பயங்கரவாத தடைச் சட்டத்தில் இருக்கின்ற அவ்வளவு அம்சமும் புதிதாக வருகின்ற சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டு இருப்பது, இலங்கையினுடைய அரசியலமைப்பில் அடிப்படை உரிமையை ஒரு பாதிக்கின்ற அல்லது அதற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் அமைந்து காணப்படுகிறது.

ஒரு அரசியலமைப்பிலே ஒரு உறுப்புரையை மாற்ற வேண்டும் என்று சொன்னால் அல்லது அதனுடைய அடிப்படைத் தன்மையை மாற்ற வேண்டும் என்று சொன்னால் சர்வசன வாக்கெடுப்பு நடத்தி அதன் மூலமாகவே அச்சரத்துக்கள் திருத்தப்பட முடியும்.

அப்படி இருக்க, இந்த பயங்கரவாத தடைச் சட்டமானது இலங்கையினுடைய அடிப்படை உரிமையை கேள்விக்குட் படுத்துகின்ற இந்த சட்டமானது, இலங்கையினுடைய பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டுள்ள இந்த அரசாங்கமானது கொண்டு வருகின்ற சந்தர்ப்பத்திலே, அது மக்களுடைய உணர்வுகளை புண்படுத்தகூடிய வகையில் அமைந்து காணப்படும் என்ற விடயத்தினை நாங்கள் ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகின்றோம்.

அதுமாத்திரமல்ல, இந்த சர்வதேச ரீதியாகவும் சரி அல்லது சர்வதேச ரீதியிலே அங்கீகரிக்கப்படாத அல்லது தமிழ் மக்கள் மாத்திரமல்ல பெரும்பான்மை மக்களும் எதிர்க்கும் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் எங்களுடைய இந்த இலங்கை நாட்டிற்கு பொருத்தமில்லை.



ஏனென்று சொன்னால் தற்பொழுது பயங்கரவாதம் இல்லாத ஒரு நாட்டிற்கு ஏன் இந்த பயங்கரவாத சட்டம் என்ற கேள்வியானது அனைவர் மனதிலும் எழுகின்றது.

எனவே இந்த அரசாங்கமானது தேர்தல் வாக்குறுதியில் கொடுத்த அந்த வாக்குறுதிகளை பின்பற்றி, இந்த பயங்கரவாதத்தின் ஊடாக மக்களை அடக்கும் அல்லது ஒடுக்கும் செயல்பாடுகளை நிறுத்த வேண்டும். எனவே இந்த சட்டமூலத்தை நாங்கள் தொடர்ச்சியாக எதிர்க்கின்றோம், தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள், தமிழ் சமூகம் எதிர்க்கின்றது என்ற செய்தியை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். நாட்டில் பயங்கரவாதம் இல்லாத சூழலில் இத்தகைய சட்டம் அவசியமற்றது.

தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய, மக்களை ஒடுக்கும் இத்தகைய சட்ட முயற்சிகளை அரசாங்கம் கைவிட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.



# நல்லகண்ணு ஐயாவின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது..!



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு அவயங்களை இழந்தவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஒருவருமே வெற்றி பெறவில்லை. அவர்களுக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்ட முன்னாள் இயக்கத்தவர் ஒருவர் சொன்னார் கிட்டத்தட்ட 15,000 வீடுகளுக்கு ஏறி இறங்கியிருப்போம் என்று. ஆனால் அவர்கள் எந்தப் பெண்ணுக்காகப் பிரச்சாரம் செய்தார்களோ, எந்த மக்களுக்காக அந்தப் பெண் தன் ஒரு காலை இழந்தாரோ, அவருக்கு கிடைத்த வாக்குகள் மொத்தம் 2000. ஆனால் அர்ஜுனாவுக்கு கிடைத்தவை அதைவிடப் பல மடங்கு. அப்படியென்றால் தமிழ் மக்கள் யார் தங்களுக்குத் தலைவர்களாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்?**

தமிழ்நாட்டில் மூத்த கொம்யூனிஸ்ட் தலைவர் நல்ல கண்ணு இயற்கை எய்தி சில நாட்களில் நடிகர் விஜயின் மனைவி விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தை அணுகிய செய்தி வெளிவந்தது. நல்ல கண்ணுக்கு அஞ்சலிகள், வணக்கங்கள் புகழுரைகள், இரங்கல் உரைகள் போன்றன வெளிவந்து கொண்டிருந்த ஒரு பின்னணிக்குள், விஜயினுடைய விவாகரத்து செய்தியும் வெளிவந்தது. தமிழ்கூறும் நல்லுலகில் அதிகம் வைரல் ஆகியது எதுவென்று பார்த்தால் விஜயின் விவாகரத்துச் செய்தி தான்.

நமது காலத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு முன்னுதாரணம் மிக்க இலட்சியவாதி, அரசியல்வாதி, செயற்பாட்டாளர் நல்லகண்ணு எனலாம். அவருக்கு அஞ்சலி செலுத்திய தமிழக முதல்வர் ஸ்டாலின் அவரை "வாழ்நாள் போராளிக்கு வீரவணக்கம்" என்று கூறி முழக்கமிட்டார்.

நல்லகண்ணுவைப் போல நல்ல மனிதர்களை அரசியலில், அரசியல் செயற்பாட்டில் காண்பது அரிது. அவர் 101 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். தமிழ்நாட்டில் அதிக காலம் சிறையில் இருந்த கொம்யூனிஸ்டுகளில் அவரும் ஒருவர். தன்னுடைய வாழ்நாளில் அவர் என்றைக்குமே தனியார் மருத்துவமனைக்குச் சென்றதில்லை. இறுதி நாள் வரையிலும் அவர் அரச மருத்துவமனைக்குத்தான் சென்றார்.தனக்கென்று பெரிய அளவில் சொத்துக்களைச் சேர்த்ததில்லை. தன் குடும்பத்துக்கும் சேர்த்ததில்லை. தனக்கு கிடைத்த பரிசுகளையும் நன்கொடைகளையும் அவர் பொது நலனுக்கே செலவழித்தார். 101 ஆண்டுகள் ஏறக்குறைய ஒரு சன்னியாசியைப் போல அவர் வாழ்ந்தார். உண்மையாகவே ஒரு வாழ்நாள் போராளியாக வாழ்ந்தார்.


ஆனால் துயரம் என்னவென்றால், அவருடைய மிக நீண்ட வாழ்நாளில் அவர் என்றைக்குமே தமிழகத்தில் எந்த ஒரு தேர்தலிலும் வெற்றி பெற்றதில்லை. அவரைப் போன்ற நேர்மையான ஒரு செயற்பாட்டாளரை தமிழ்நாடு என்றைக்குமே தனது பிரதிநிதியாகத் தெரிவு செய்யவில்லை. ஏன்?

அவரை வாழ்நாள் போராளி என்று கூறுகிறார்கள். மக்களுக்காகவே வாழ்ந்தவர் என்று கூறுகிறார்கள். இலட்சியத்தை விட்டுக் கொடுக்காதவர் என்று போற்றுகிறார்கள். ஆனால் அவரை என்றைக்குமே தேர்லில் வெற்றி பெற வைக்கவில்லை. ஏன்? நல்லவர்கள் அரசியலுக்கு வந்தால்தானே நாடு உருப்படும்? அரசியலில் நேர்மையானவர்கள், கண்ணியமானவர்கள் காவி வேடம் பூணாத உண்மையான சந்நியாசிகளின் தொகை அதிகரித்தால்தான் நாடு உருப்படும். ஆனால் தமிழ் கூறும் நல்லுலகம் நல்லகண்ணுகளை விடவும் நடிகர்களைத்தானே எதிர்பார்ப்போடு பார்க்கிறது?

வாழ்நாள் போராளிகள், வாழும் காலத்தில் போற்றப்படாமல் இறந்தபின் ஏன் போற்றப்படுகிறார்கள்? வாழும் காலத்தில் அவர்களுடைய அருமை ஏன் தமிழ் சமூகத்துக்குத் தெரியாமல் போகிறது? வாழ்ந்து மறைந்த பின் தான் அவருக்கு சிலை வைத்துப் பட்டம் சூட்டிக் கொண்டாடுகிறார்கள்.

ஆனால் மேற்கு வங்கத்தில், திரிபுராவில், கேரளத்தில் ஓரளவுக்கு நேர்மையான இடதுசாரி தலைவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு திரிபுராவில் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒரு முதலமைச்சரைப் பற்றிய செய்திகளை சமூக வலைத்தளங்களில் பார்க்கமுடிந்தது. அவர் மிக எளிமையாக வாழ்ந்தார். சொத்துச் சேர்க்கவில்லை. அரச போகங்களை அதிகம் அனுபவிக்கவில்லை. அவருடைய மனைவி ஒரு அரச ஊழியர். முச்சக்கர வண்டியில் தான் அலுவலகத்துக்கு சென்றார். அரசு வாகனத்தில் சென்றதில்லை. அப்படிப்பட்ட எளிமையான ஒருவரை திரிபுரா மக்கள் தமது தலைவராகத் தெரிவு செய்தார்கள். ஆனால் இந்திய மாநிலங்களில் அதிகம் கல்வியறிவுடைய மாநிலங்களில் ஒன்றாகக் கணிக்கப்படும் தமிழ்நாட்டில் ஏன் நல்லகண்ணுகள் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை?

நடிகர்களுக்காகத் தீக்குளிக்கும் ஒரு சமூகம். நடிகர்களுக்காக மீசையை வழித்துக் கொள்கிற, மொட்டை அடித்துக் கொள்கிற ஒரு சமூகம். நடிகர்களைப் பார்க்கப் போய் நசிந்து சாகும் ஒரு சமூகம். அரசியலில் நடிக்க மறுத்து நேர்மையாக வாழ்ந்த மனிதர்களை ஏன் அவர்கள் வாழும் காலத்திலேயே போற்றத் தவறுகிறது?



இது சமூகத்தின் கோளாறா? அல்லது நேர்மையான அரசியல் செயற்பாட்டாளர்கள் தேர்தல் அரசியலில் வெற்றி பெறத் தேவையான தந்திரங்களையும் வியூகங்களையும் கற்றுக்கொள்ளத் தயாரில்லையா? அல்லது அவர்களால் அவற்றைக் கற்றுக் கொள்ள முடியவில்லையா?

இதில் இரண்டாவது விடயம்தான் அதிகம் விவாதிக்கப்பட வேண்டியது. இது தமிழ்கூறும் நல்லுலகில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் அவதானிக்கப்பட்ட ஒரம்சம். தேர்தல்மைய அரசியலில் நேர்மையானவர்கள் தங்களைப் பொருத்தி கொள்வதற்கு அல்லது சுதாகரித்துக் கொள்வதற்கு ஒன்றில் விரும்புவதில்லை. அல்லது அவர்களுக்கு முடியவில்லை.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க தேர்தல் ஜனநாயகங்களில் மட்டுமல்ல மேற்கத்திய தேர்தல் ஜனநாயகங்களிலும் அந்த நிலைமை உண்டு.

பொதுவாக புத்திசாலித்தனத்திற்கும் ஜனரஞ்சகத்துக்கும் பொருந்தி வருவது குறைவு. இதில் புத்திசாலித்தனத்தை ஜனரஞ்சகமாக விற்கத் தெரிந்தவர்கள் அரிதாக வெற்றி பெறுகிறார்கள். பெரும்பாலான அறிஞர்களும் நேர்மையானவர்களும் தேர்தல்மைய அரசியலில் தேர்தல் போட்டிகளில் இறங்கி அசிங்கப்பட வேண்டியிருக்கும் என்று கருதுகிறார்கள். அதனால் பெரும்பாலும் பின்வாங்குகிறார்கள்.

அதுமட்டுமல்ல, தலைமைத்துவம் எனப்படுவது தனிய அறிவு மட்டுமல்ல. தியாகம் மட்டும் அல்ல. வீரம் மட்டும் அல்ல. அது ஒரு கலப்பு ஒழுக்கம். அறிவு கூடியவர்கள் பல சமயங்களில் இதயத்தால் செழிப்பில்லாதவர்களாக இருப்பார்கள். அறிவு கூடியவர்கள் பல சமயங்களில் தலைமைத்துவ பண்பு இல்லாதவர்களாக இருப்பார்கள். புத்திசாலிகள் பல சமயங்களில் இதயம் இல்லாதவர்களாக இருப்பார்கள். உன்னதமான தலைமை என்பது அறிவும் இதயமும் இணைந்து மேல் எழுவது. அது மிக அரிது.

நான் திரும்பத்திரும்ப கூறும் ஒரு நடைமுறை உதாரணம் உண்டு. தூய தங்கத்தை வைத்து ஆபரணம் செய்ய முடியாது. அதில் செப்பைக் கலக்க வேண்டும். அதாவது தங்கத்தை பிரயோகநிலைக்குக் கொண்டு வருவதென்றால் அங்கே கலப்பு அவசியம். தூய தங்கத்தை வேண்டுமானால் அயர்ண் சேவில் வைக்கலாம் ஆனால் ஆபரணமாக்க முடியாது.

அப்படித்தான் பொது வாழ்விலும் அரசியலிலும். தங்களைத் தூய தங்கங்களாகக் கருதுபவர்கள், செப்போடு கலக்கத் தயாராக இல்லாதவர்கள், நடைமுறை அரசியலில் இறங்க முடியாது.

தேர்தல் மைய அரசியலுக்கு என்று தொழில் திறன்கள் வேண்டும். தந்திரங்கள் வேண்டும். உத்திகள் வேண்டும். செல்வம் வேண்டும். புகழ் வேண்டும். தலைமைத்துவப் பண்பு வேண்டும். இவை அனைத்தும் ஒன்றாக வாய்க்கப் பெற்றவர்கள் தேர்தல் மைய அரசியலில் வெற்றி பெறுகிறார்கள். தூய இலட்சியங்கள் அல்லது தூய தங்கமாக இருப்பவர்கள் அல்லது தூய அறிஞர்களாக இருப்பவர்கள் தேர்தல் மைய அரசியலில் வெற்றி பெறாமல் போகும் இடங்கள் இவைதான்.

தமிழ்நாட்டில் நல்லகண்ணு மட்டுமல்ல, மணிப்பூரில் இரோமி சர்மிளா என்ற பெண் மக்களுக்காக நீண்ட நாட்கள் உண்ணாவிரதம் இருந்தவர். தேர்தல் கேட்டபோது அவருடைய மக்கள் அவரை குரூரமாக நிராகரித்தார்கள்.

ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு அவயங்களை இழந்தவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஒருவருமே வெற்றி பெறவில்லை. அவர்களுக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்ட முன்னாள் இயக்கத்தவர் ஒருவர் சொன்னார் கிட்டத்தட்ட 15,000 வீடுகளுக்கு ஏறி இறங்கியிருப்போம் என்று. ஆனால் அவர்கள் எந்தப் பெண்ணுக்காகப் பிரச்சாரம் செய்தார்களோ, எந்த மக்களுக்காக அந்தப் பெண் தன் ஒரு காலை இழந்தாரோ, அவருக்கு கிடைத்த வாக்குகள் மொத்தம் 2000. ஆனால் அர்ஜுனாவுக்கு கிடைத்தவை அதைவிடப் பல மடங்கு. அப்படியென்றால் தமிழ் மக்கள் யார் தங்களுக்குத் தலைவர்களாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்?

ஆயுதப் போராட்ட அரசியலும் தேர்தல் மைய அரசியலும் ஒன்று அல்ல. இலட்சியவாத அரசியலும் தேர்தல்மைய அரசியலும் ஒன்று அல்ல என்பதைத்தான் மனித குல வரலாறு தொடர்ச்சியாக நிரூபித்து வந்திருக்கிறது.

இங்கேதான் நல்ல கண்ணுகள் தம் சொந்த மக்களாலேயே தெரிவு செய்யப்படாமல் போகிறார்கள். அல்லது இறந்த பின் அதிகம் போற்றப்படுகிறார்கள்.

இதில் ஈழத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் எதுவென்றால், 2009க்குப் பின்னரான ஈழத் தமிழ் மிதவாத அரசியலானது இன்னமும் சரியான ஒரு தடத்தில் ஏறவில்லை. ஒரு பகுதியினர் அதனை ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியாக, இலட்சிய வாதமாகப் பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பது குறைவு.

இதன் பொருள் தமிழ் மக்கள் இலட்சிய வாதத்திற்கு எதிரானவர்கள் என்பதல்ல. இங்கே தவறு தமிழ் மக்களில் இல்லை. மாறாக இலட்சியவாதிகளால் தங்களுடைய அரசியலை தேர்தல் மொழியில் மொழிபெயர்க்கத் தெரியவில்லை என்பதுதான். தமது இலட்சியங்களை நிறுவனமயப்படுத்த முடியவில்லை என்பதுதான். அதற்கு தேவையான கட்டமைப்புகளையும் அவர்கள் கட்டி எழுப்பத் தவறுகிறார்கள்.

அண்மையில் தமிழகத்தில் மேற்படிப்புக்காகச் சென்ற ஒரு கிறிஸ்தவ மதகுரு விடுமுறையில் வந்தபோது சொன்னார் "அங்கே கிராம மட்டத்தில் வட்டச் செயலர் என்ற பொறுப்பு எவ்வளவு முக்கியமானது, வினைத்திறன் மிக்கது?" என்று. கீழிருந்து மேலோக்கி வாக்காளர்களை கட்சி மயப்படுத்துகின்ற வேலையை வட்டச் செயலர்கள் செய்கிறார்கள்.

தமிழ்த் தேசிய கட்சிகளில் எத்தனை அவ்வாறான கீழ்மட்டக் கட்டமைப்புகளைக் கொண்டிருக்கின்றன? தமிழரசுக் கட்சியிடம் ஓரளவுக்கு உண்டு. அதனால்தான். அந்தக் கட்சி வடக்கு கிழக்கு தழுவிய ஒப்பீட்டளவில் அதிக வெற்றிகளைப் பெறுகின்றது.

எனவே தமிழ்த் தேசிய அரசியலில் தூய்மைவாதம் இலட்சியவாதம் பேசுகின்ற கட்சிகள் முதலில் செய்ய வேண்டியது தங்களுக்குள்ள மக்கள் ஆதரவை நிறுவனமயப்படுத்துவது;கட்சி மயப்படுத்துவது; அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்குவது. இதற்குத் தமிழக உதாரணங்கள் கூடத் தேவையில்லை. தாயகத்திலேயே ஒரு காலம் ஆயுதப் போராட்டம் அவ்வாறான கட்டமைப்புகளைக் கொண்டிருந்தது.

கிராம மட்டத்தில் கிராமியப் பொறுப்பாளர்கள் அல்லது வட்டாரப் பொறுப்பாளர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு பொறுப்பாக ஏரியா பொறுப்பாளர் இருப்பார். அவருக்கு மேல், மாவட்டப் பொறுப்பாளர் இருப்பார். அவருக்கு மேல் அரசியல் துறைப் பொறுப்பாளர் இருப்பார். இது அரசியல் துறைக்கு மட்டுமல்ல, நிதித்துறை, படைத்துறை, புலனாய்வுத் துறை முதலாக எல்லாத் துறைகளுக்கும் இருந்தது. இந்த கட்டமைப்புகளுக்கு ஊடாகத்தான் எண்பதுகளில் எல்லா இயக்கங்களும் வளர்ச்சி பெற்றன.

எனவே தமிழ்த் தேசிய அரசியலை பாரம்பரிய தொழில்சார் அரசியலாகக் கருதாமல், புரட்சிகரமான மிதவாத அரசியலாகக் கருதுபவர்கள், பயில்பவர்கள் முதலில் செய்யவேண்டியது கட்டமைப்புச் சார்ந்த சிந்திப்பதுதான்.கட்டமைப்புச் சார்ந்த சிந்தித்தால்தான், எதையும் கட்டமைப்புக்குள்ளால் சிந்தித்தால்தான் நல்லகண்ணுகளை தலைவர்கள் ஆக்கலாம். கெட்ட கண்ணுகளை பொதுவாழ்வில் இருந்து தோற்கடிக்கலாம்.



# அமெரிக்காவினால் இந்து சமுத்திரத்தில் வைத்து ஈரானிய போர்கப்பல் மூழ்கடிப்பு!

## இலங்கைக் கடற்படை மீட்பு நடவடிக்கைகளில் இறங்கியதால் அது சர்வதேச நெருக்கடியில் சிக்குமா?

தீயாய் எரிந்து கொண்டிருக்கும் ஈரானிய - இஸ்ரேல் - அமெரிக்க யுத்தகளத்துக்கு மத்தியில், இந்து சமுத்திர கடல் பரப்பில் ஈரானிய கப்பல் ஒன்றை அமெரிக்கா நீர்மூழ்கி கப்பலின் ஏவுகணை மூலம் தாக்கி மூழ்கடித்துள்ளது.

இலங்கைக்கு அருகில் இவ் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளமையால், இலங்கை மனிதாபிமான அடிப்படையில கப்பலில் இருந்த தத்தளித்துகொண்டிருந்த ஈரானிய மாலுகிகளை பாதுகாப்பாக மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளது. தற்போது, இலங்கை அரசியலில் ராஜதந்திர அணுகுமுறை மூலம் பரபரப்பாக ஈடுபட்டு கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் 22 மில்லியன் இலங்கை மக்களினுடைய பாதுகாப்பையும் உறுதி செய்யும் விதமாக இவை பேசுபொருளாக மாறியுள்ளது.

ஈரானுக்கு சொந்தமான IRINS Denaஎன்கின்ற போர்கப்பல், பிப்ரவரி 18-25 வரை Bay Of Bengal பகுதியில இந்தியாவின் விருந்தாளியாக போர் பயிற்சிகளில் ஈடுபட்டதன் பின்னர் தரித்து நின்றது.

பயிற்சியின் பின் இந்திய கடற்படையோடு கைகுலுக்கி விடைபெற்றது. ஆனால் இப்பொழுது, ஈரான் போரின் காரணமாக இந்த பயிற்சிகள் முடிந்து ஈரானுக்கு போர்கப்பல்கள் உடனடியாக நகர்த்தப்பட வேண்டியதால் கப்பலானது ஈரானை நோக்கி இந்து சமுத்திரத்தில் நகரும் போது அமெரிக்காவின் நீர்மூழ்க்கி கப்பல் (Submarine) இல் இருந்து பாய்ந்து சென்ற ஏவுகணை தாக்கி அழித்துள்ளதாக அமெரிக்கா உத்தியோகபூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளது. தகவலினை (மார்ச் 4 2026), வெள்ளை மாளிகையின் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் - Pete Gantz ஊடகங்களுக்கு முன்னால் தோன்றி, உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அறிவித்ததை தொடர்ந்து, கப்பலில் 180க்கும் அதிகமான ஈரானிய கடற்படை வீரர்கள் பயணித்துக் கொண்டிருந்ததாகவும், அதில் மூழ்கடிக்கப்பட்டதிலிருந்து இப்பொழுது 80-100 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று New York Times ஊடக பத்திரிகை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஆனால் 100 பேர் இதுவரை வரை காணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

New York Times பத்திரிகை முக்கியமாக குறிப்பிடுவது என்னவென்றால், 32 வீரர்களை காயங்களுடன், மோசமான நிலையில் இலங்கை அரசு காப்பாற்றி இருக்கிறது. அதனுடைய விமானப்படை கப்பல்கள் மற்றும் கடற்படைகள் சென்று, காலியிலிருந்து 40கடல் மைல் தொலைவில் இந்து சமுத்திரத்தில் அவர்களை பாதுகாப்பாக காப்பாற்றி, ஆம்புலன்சில் (Ambulance) வைத்தியசாலையில் சேர்த்துவிட்டதாக எழுதியுள்ளது.

அதில், இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமசந்திர அவர்களுடைய பெயரை மேற்கோள் காட்டி, 32 பேரை காப்பாற்றி இருப்பதாக உத்தியோகபூர்வமாக செய்தி வெளியாகியுள்ளது.

தற்போது, சமூக வலைத்தளங்களிலும் இது பேசுபொருளாக உள்ளது.

இந்தியாவிலிருந்து புறப்பட்டு சென்ற கப்பல், இலங்கை இந்து சமுத்திரத்தில் நகர்ந்தது. இந்தியாவில் தான் கூட்டு பயிற்சி பெற வந்தது. ஆகவே, மூழ்கடிக்கப்பட்ட கப்பலிலிருந்து அபாய சமிக்கைகள் எழுந்துள்ள நிலையில், இந்தியா முன்னதாக வந்து காப்பாற்ற வேண்டும். அல்லது அதன் உளவு தகவல்கள் உதவி தாக்கத்தை தவிர்த்திருக்க வேண்டும்.

பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பில் இருக்கின்ற தனது கூட்டாளி பயிற்சிக்கு வந்த போர் கப்பல் இருந்தாலு அது தாக்கப்பட்ட பின்னான மீட்பு நடவடிக்கைகளில் இந்தியா காய் நகர்த்தி இலங்கையிடம் பந்தை எறிந்து விட்டதாக தெரிகிறது. இவற்றில் ராஜதந்திர கையாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அமெரிக்காவின் பாதுகாப்பு துறை செயலாளர் அறிவித்ததன்படி இதற்குள் இலங்கை மீதுஒரு ராஜதந்திர உந்துதல்/அழுத்தம் இருந்ததாகத்தான் அவர் மேற்கோள் சுட்டி காட்டியிருந்தார். உலக செய்திகள் அதைத்தான் தெரிவிக்கின்றன.

ஈரானுடைய உயர்ஸ்தானிகர் முன்பே இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த யுத்தத்துக்கு நீங்கள் நடுநிலை வகிக்கலாம் ஆனால் எங்கள் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவை கண்டித்து, அறிக்கைகள் விட வேண்டும் என்று உயர்ஸ்தானிகர் அடிக்கடி வலியுறுத்தி வந்தார். அவை பாராளுமன்றம் வரை ஒலித்தது.

இந்த விடயத்தை உற்று கவனித்து பார்த்தால், அமெரிக்காவின் பாதுகாப்பு துறை செயலாளர் இலங்கை மீது ராஜதந்திர அழுத்தங்கள் இருந்ததாக குறிப்பிட்டிருந்தார். ஈரான் வீரர்களை காப்பாற்றுவதற்கு, இப்போதைய பதற்ற நிலைமையில் இலங்கை மீட்பு ஏற்பாடுகள் செய்திருக்கிறது.

ஏனென்றால் இலங்கைக்கு அருகில் தான் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. மூழ்கி கொண்டிருப்பதையும் பார்த்துக் கொள்ள முடியாது. இலங்கையில் இருக்கின்ற ஈரானிய உயர்ஸ்தானிகர் ஆலயம் மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் வந்திருக்கலாம். சில இராஜதந்திர நகர்வு மற்றும் உடனடி மனிதாபிமான உதவி என்ற நிலையில் இப்போதைய நிலைக்கு 32 பேரை இலங்கை கடற்படை காப்பாற்றி Ambulance மூலம் உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்துள்ளது.




இனி என்னென்ன நடவடிக்கைகள்? எப்படியான சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது யாருக்கு கையளிக்க போகின்றார்கள்? ஈரானிய உயர்ஸ்தானிகள் ஊடாக ஈரானுக்கு அனுப்பி வைக்க போகிறார்களா என்பதெல்லாம் பாதுகாப்பு துறை சார்ந்த விடயங்கள். ஆனால் அருண் ஹேமசந்திர அவர்களுடைய நாமம், இன்றைக்கு அமெரிக்காவின் பாதுகாப்பு செயலகம் வரைக்கும் ஒலித்திருக்கிறது. அவற்றைவிட New York Times மற்றும் Washington Times பத்திரிகைகளில் கூட பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு இலங்கை இப்பொழுது சம்பந்தப்பட்டு போய்கொண்டிருக்கிறது.

வடகொரியா, ரஷ்யா மற்றும் சீனா ஈரான் சார்பு நிலைப்பாடுகளை எடுத்திருந்தாலும் மற்ற நாடுகள் அதாவது இந்தியா பிரிக்ஸ் கூட்டமைப்பில் இருக்கிறது . அந்த கூட்டாளி தாக்கப்படும் போது மௌனம் காக்கிறது.

ஈரானுடன் ஏவுகளைகளால் தாக்கிய Qutar (கட்டார்), UAE (ஐக்கிய அரபு இராச்சியம்) மற்றும் Kuwait (குவைத்) போன்ற நாடுகளிடம் தொடர்பு கொண்டு நரேந்திர மோடி நிலைமை விசாரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.




ஆனால் தன்னுடைய BRICS கூட்டணியில் இருக்கும் நட்பு நாடான ஈரானிடம் எவ்வித தொடர்பு ஏற்படுத்தவில்லை அல்லது அதற்கான முகாந்திர செய்திகள் வெளிக்கிளம்பவில்லை.

அதைவிட கடலில் மரணமடைந்த ஈரானிய வீரர்கள் 80 பேரின் சடங்களை இலங்கை மீட்டிருக்கிறது.


அந்த சடங்களை வழங்க ஈரான் கோரிக்கை விட்டபோதும் இலங்கை இத்தகைய சூழலில் வழங்க முடியாது என கூறியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதைவிட காப்பாற்றப்பட்ட வீரர்களை அமெரிக்கா ஒருவேளை கேட்டால் இலங்கை நிலை இராஜதந்திர ரீதியில் இன்னும் சங்கட நிலைக்கு தள்ளப்படும்.

அதைவிட இன்னொரு ஈரானிய கப்பல் பாணம்துறைக்கு மிக அருகில் நின்றுகொண்டு அவசர உதவியாக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட கோரிக்கை விடுத்திருக்கிறது. அதை மிக ஆழமாக இலங்கை பரிசீலித்து வருகிறது. ஆக இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ராஜதந்திர திருசங்கு நிலைமையை இலங்கை எப்படி அமெரிக்காவை சமாளிக்கப் போகிறது, இஸ்ரேலினுடைய தூதரகங்களோடு சமாளிக்கப் போகிறது ஈரானோடு சமாளிக்கப்போகிறது என்பதுதான் இப்போது உள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஒரு அவசியமான நடவடிக்கையாக இருக்கிறது. ஆகவே, ஈரானிய கப்பலை காப்பாற்றி அதில் உயிருக்கு ஆபத்தான நிலையில் துடித்து கொண்டிருந்த காயமடைந்த வீரர்களை மனிதாபிமான நடவடிக்கையில் காப்பாற்றி உள்ளோம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலைமையிலே, இலங்கை செய்தது மனிதாபிமான நடவடிக்கை என்பதால் வரவேற்கத்தக்கது. கப்பல் கடலில் மூழ்கி இருந்த நிலையில், பாதுகாப்பாக மீட்டுள்ளது. ஏனைய ஈரானிய மாலுமிகளை தேடும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது. ஆனால், இலங்கை சார்பான ஈரானிய, அமெரிக்க, இஸ்ரேல், இந்தியா ஆகிய நாடுகளின் ராஜதந்திர சிக்கல்கள் மற்றும் இதற்கான எதிர்பாராத சிக்கல்களை எவ்வாறு கையாளப் போகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

**கு.மதுசுதன்**
**B.Sc(Hons), M.Sc**
**அரசியல் ஆய்வாளர்**






# மறைந்தும் மறையா பங்காரு அம்மாவின் 86வது அவதாரத்திருநாள்



மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் மறைந்தும் மறையா பங்காரு அம்மாவின் அவதாரத்திருநாள் மார்ச் 3ம் திகதி செவ்வாய்கிழமை மாலை பூசையுடன் நடைபெற்று, 8-03-2026 ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மதியம் 1 மணி-வரை தொடர்ந்து சிறப்புப் பூசைகள் நடைபெற்று, மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

அனைத்து சக்திகளும் அன்னையின் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கப்டுகின்றனர்.

80E நாஸ்டீன் வீதி, ஸ்காபரோ
தொடர்புகளுக்கு: 647-436-9647

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24

# SPLC

## Come Learn and Celebrate Diversity!

### Builds Friendship and Respect

**Everyone** from different backgrounds can learn about each other, become friends and feel more connected through **fun activities**

### Understand and Connect

Learn more about **Indigenous, Black, Asian, and 2SLGBTQIA+** communities and feel more connected to them.

### Volunteer and Make a Difference

VOLUNTEER

Seniors and youth can **become Diversity Ambassadors** helping others learn, grow, and feel included!

**For more information:**

Call (416)493-3333 Ext.305
Email elsa@splc.ca
3333 Finch Avenue East,
Scarbrough, Ontario M1W 2R9



Funded in part by the Government of Canada's New Horizons for Seniors Program | Canada

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

கனடிய செய்திகள்
Canadian News

# கிளிநொச்சி உள்ள செயற்கைக் கருத்தரிப்பு மையத்தை சீராக இயங்கவைக்கும் திட்டம் பற்றிய விளக்கத்தைச் செவிமடுத்தவைத்த பயனுள்ள கருத்தரங்கு!

**எம்பிபி லோகன் கணபதி, டாக்டர ராஜேஷ் லோகன் மற்றும் டாக்டர் மைலாசன் ஆகியோரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து மருத்துவத்துறை பேராசிரியர்கள் ராஜேந்திரா சுரோந்திரகுமாரன். மற்றும் சிவலிங்கராஜா ரகுராமன். ரவிராஜ் ஆகியோர் இணையவழியாக கலந்து கொண்டு மிகுந்த சிரத்தையோடு கருத்துக்களைப் பகிர்ந்தனர்.**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கடந்த மார்ச் 2ம் திகதி திங்கட்கிழமை அன்று கனடா மார்க்கம் நகரில் “வன்னி வீதி”க்கு அருகாமையில் அமைந்துள்ள “ஆன்லின் சனசமூக நிலைய”த்தின் கூட்ட அறையில் நடைபெற்ற மேற்படி கிளிநொச்சி செயற்கைக் கருத்தரிப்பு மையம் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு மற்றும் விளக்கவுரைகளை சமர்ப்பித்தல் ஆகிய நிகழ்வுகளை, மார்க்கம் தொகுதி மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடு செய்து அத்துடன் தலைமை தாங்கியும் அதனை நடத்தினார். மேற்படி சந்திப்பில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் இயங்கிவரும் அச்சு ஊடகம் - வானொலி - தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடக நிறுவனங்களின் சார்பில் பல பிரதம ஆசிரியர்கள் - செய்தியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு முதலில் உரையாற்றிய எம்பிபி லோகன் கணபதி அவர்கள் தனது அறிமுக உரையில் எமது தாயகத்தில் பிறப்பு வீதம் குறைந்துள்ளமைக்கு காரணமாக உள்ள பலவற்றில் இயற்கையாக கருத்தரிக்கும் குறைபாடுகள் உள்ள கணவன் அல்லது மனைவியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் யுத்தத்திற்குப் பின்னர் அங்கு எடுக்கப்பெற்ற கணக்கெடுப்புக்களின் படி யுத்த காலத்தில் மரணித்த போராளிகள் மற்றும் பொதுமக்கள் மற்றும் நாட்டை விட்டு இன்றும் வெளியேறிக் கொண்டிருக்கும் எமது மக்கள். இவை காரணமாக தமிழர்களின் எண்ணிக்கை மிக வேகமாக குறைவடைந்து வருவதும் அங்கு செயற்கை கருத்தரிப்பு மையங்களின் அவசியம் பற்றிய முக்கியத்துவத்தை பறைசாற்றுகின்றன என்று தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய குடும்ப வைத்தியர் டாக்டர் ராஜேஷ் லோகன் அவர்கள் எமது தாயகத்தில் கருத்தரிப்பு வீதத்தை அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும் முக்கியமாக எடுத்துரைத்து அத்துடன், நாம் வாழும் கனடாவிலும் எமது தமிழினம் இன்னும் மக்கள் தொகையில் அதிகரித்தவர்களாக வருவதற்கு எமது இளைய தம்பதிகள் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதில் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதை வற்புறுத்தி தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.










அவர் மேலும் தெரிவித்த பயனுள்ள கருத்துக்களில் இங்குள்ள இளைய தம்பதிகள் பல்வேறு காரணங்களுக்காக பிள்ளைகளைப் பெற்றெடுப்பதோ அன்றி அதிகம் பிள்ளைகளை தங்கள் குடும்பத்தில் இணைத்துக் கொள்வதற்கு ஆர்வம் கொள்ளாமல் இருப்பதற்குரிய பல காரணங்களை ஆதாரங்களை எடுத்துரைத்தார். அடுத்து உரையாற்றிய கனடா வாழ் குடும்ப வைத்தியர் மைலாசன் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் கற்று வெளியேறியவர்களின் கனடா அமைப்பின் தான் வகிக்கும் முக்கிய பங்கு தொடர்பாகவும் இந்த வைத்தியர்களின் அமைப்பானது இதுவரை தாயகத்தின் தேவைகளாக இருந்த பல திட்டங்கள் தொடர்பாக உரையாற்றி தற்போதைய அவசரமும் அவசியமும் கொண்டதாக விளங்கும˙ “செயற்கை கருத்தரிப்பு மையத்தை கிளிநொச்சியில் சீராக இயங்கச் செய்வதில் உள்ள சவால்கள் மற்றும் தொழிற்நுட்பக் காரணிகள் மற்றும் அவற்றிக்கு தேவையான நிதியை எவ்வாறு பெற்றுக் கொள்வது போன்ற விடயங்களையும் பகிர்ந்து கொண்டார் அத்துடன் மேற்படி கருத்தரிப்பு மையங்களை மக்களின் தேவைகருதி இயக்குவதற்கு எவ்வாறு யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடமும பக்க பலமாக இருக்கும் என்ற தகவல்களையும் நம்பிக்கையளிக்கும் வகையில் தெரிவித்தார்.

அடுத்து இணையவழி ஊடாக பயனுள்ள கருத்துக்ளைப் பகிர்வதற்காகவும் இந்த கிளிநொச்சி கருத்தரிப்பு மையத்தின் அவசியம் பற்றிய உண்மையானதும் அர்ப்பணிப்புள்ளதுமான எண்ணங்களைச் சுமந்த வண்ணம் யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் பேராசிரியருமான சிவலிங்கராஜா ரகுராமன் அவர்கள் முன்வந்தார்.

அவரது கருத்துக்களின் மூலம் அவர்கள் எவ்வளவு சிரத்தையுடன் இந்த திட்டத்தை சீராக இயங்கவைப்பதில் தனக்குள்ள அக்கறையை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் பிறப்பு விகிதம் குறைவடைவதற்கு கருத்தரிக்கும் உடல் ரீதியான சாதகமான உறுப்புக்களின் திறன் அற்றவர்கள் இவ்வாறான செயற்கை கருத்தரிப்பு நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் மிக அவசியமான என்பதை உணர்கின்றார்கள் என்றும் அனால் மிகுந்த பொருட்செலவுடையதும் கட்டணங்கள் அதிகமாகவும் அத்துடன் சிகிச்சை மேற்கொள்ளப்படும் காலப்பகுதியில் அந்த தாய்க்கு தேவைப்படும் மருந்துகளுக்கான செலவுகள் என்பவும் யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்க குடும்பங்களிற்கு ஏற்புடையதாக இல்லை என்றும் இதனால் இந்த திட்டத்தை சீராக இயங்கச் செய்வதற்கு தொடர்ச்சியான நிதியின் தேவையும் உள்ளதால் நன்கொடையாளர்களின் தேவையோ அன்றி அரசாங்கத்தின் நிதி பங்களிப்போ அன்றி வெளிநாட்டு நிறுவனங்களில் ஆதரவோ நிச்சயம் தேவை என்பதை வலியுறுத்தினார். அவரது உரையிலிருந்து ஒரு தேசமாகவோ அல்லது இனமாகவோ அல்லது சமூகமாக நாமனைவரும் இணைந்து கருத்தரிக்கும் சந்தர்ப்பங்களோ அல்லத சாதகமான உடல்நிலையோ அற்றவர்கள் ஒரு குழந்தையையாவது பெற்றுக் கொள்ளும் நிலையை நாம் ஏற்படுத்தினால் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் அதேவேளை எமது பிரதேசத்திற்கு ஒரு பிரஜையும் கிட்டியுள்ளார் என்ற நிலையை நாம் கூட்டாக மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும அத்துடன் தனது பங்களிப்பு எல்லையற்று இருக்கும் என்ற தூய எண்ணத்தையும் எடுத்துச் சொன்னார்.



அடுத்து உரையாற்றிய யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதியும் பேராசிரியருமான ராஜேந்திரா சுரேந்திரகுமாரன் அவர் அனைவருக்குமான உரையை ஆற்றினார். அன்னார் ஏற்கெனவே சில தடவைகள் கனடாவிற்கு வருகை தந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கும் அத்துடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் தேவையான சில மருத்துவ உபகரணங்கள் மற்றும் உதவிகள்ஆகியவை தொடர்பாக பலரை சந்தித்து உரையாடிச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த அனுபவத்தோடு இணைத்து அன்றை தலைப்பான “செயற்கை கருத்தரிப்பு மையம்” கிளிநொச்சியில் சீராக இயங்கும் நிலையை நாம் அனைவரும் இணைந்து உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையோடு எவ்வாறு தன்னை இணைத்துக்கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிட்டு. தொடர்ந்து எமது தாயக மண்ணில் குறிப்பாக வடக்கு கிழக்கில் நிலவும் மருத்துவ சிகிச்சைகள் தொடர்பான சவால்கள் மற்றும் அரசாங்கத்தின் நிதி நிலைமை மற்றும் வெளிநாடுகளில் உள்ள சில நிறுவனங்கள் செய்ய முன்வந்துள்ள உதவிகள் தொடர்பாகவும் எடுத்துச் சொல்லி., முக்கியமாக அன்று நாம் கூடியுள்ள நோக்கங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

அத்தடன் நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒரு உதவித் திட்டத்தின் படி யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்ற “செய்றகை கருத்தரிப்பு மையத்தில் உள்ள முக்கியமான உபகரணம் நவீனப்படுத்தப்பெற்று அங்கு சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பெற்றால் அதனால் பயன்பெறப்போகின்றவர்கள் முதலில் வடக்கு கிழக்கில் வாழும் எமது உறவுகளே என்றும் பின்னர் இந்த திட்டங்கள் விரிவு படுத்தப்பெற்றால் வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகளும் அங்கு வந்து ஒரு தாய் மண்ணில் பெற்ற அனுபவமாக தங்கள் கருத்தரிப்பு என்னும் உன்னத பலனைப் பெறலாம் என்று கூறி தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்தில் பல மருத்துவர்களும் தாதி நிலை உத்தியோகத்தர்களும் ஏனையவர்களும் இந்த உன்னத பணியில் இணைந்து கொள்ள ஆர்வமாக இருக்கையில் வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள் இந்த திட்டங்களுக்கு உதவிட முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.


தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் பேராசிரியருமான ரவிராஜ் அவர்களும் இந்த திட்டத்தின் அவசியம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்களின் பிரதிநிதிகள் தங்கள் கேள்விகளையும் சொந்தக் கருத்துக்களையும் ஆரோக்கியமான முறையில் அங்கு பதிவு செய்தார்கள்.

***- UTHAYAN LJI Journalist Ganesh -***

---

## வீணாவின் கவிக்கணை

சக மனிதரை மனிதராக
பார்க்க மறந்த உலகம்,
ஏற்றத்தாழ்வில்
சிக்கித்தவிக்கும்
இளைஞர்கள்,
எதிர் காலத்தை
ஏக்கத்துடன் பார்க்கும்
சிறார்கள்,
கேள்விக்குறிதான்
வாழ்க்கையா
இனிவரும் சந்ததிக்கு?
இந்நிலை மாறுவது
என்றோ???
நாம் நிம்மதியாய்
வாழ்வதும் என்றோ???



# அமெரிக்க–ஈரான் போரில் இலங்கை யார் பக்கம்...?

## “கடன்பட்டார் நெஞ்சமாக கலங்கி நிற்கின்றார் இலங்கை வேந்தர் அநுர”

**“இலங்கைக்கு நண்பர்களாகவிருந்து கடன்கொடுத்தவர்கள், இராணுவ, பொருளாதார, ரீதியில் உதவியவர்களிடையில் ஏற்பட்டுள்ள போரில் அவர்களிடம் உதவிகளை பெற்றவர்கள் என்ற வகையில் யாருக்கு ஆதரவளிப்பது, யாரைக் கண்டிப்பது என்பதில் இலங்கை என்ற அடிப்படையில் அரசாங்கமாக முடிவெடுப்பது உண்மையில் அநுரகுமார அரசாங்கத்திற்கு இராஜதந்திர சிக்கல்கள் நிறைந்த விடயம். அதனால்தான் “கடன்பட்டார் நெஞ்சமாக கலங்கி நிற்கின்றார் இலங்கை வேந்தர்”.” ---------------------------- கே.பாலா -**

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து போரைத்தொடுத்துள்ள நிலையில் ஈரானும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கு நாடுகள் ஏவுகணை, விமானத் தாக்குதல்களினால் அதிர்ந்தும் அழிந்தும் வரும் நிலையில் இந்த போர் அணு ஆயுத யுத்தமாக மாறிவிடுமோ என்ற பேரச்சம் எழுந்துள்ளது. இவ்வாறான நிலையில் இந்த போர் மீது மட்டும் உலக நாடுகள் கவனம் செலுத்தவில்லை. மாறாக, இந்த போர் தொடர்பில் எந்த நாடுகள் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் ஆதரவளிக்கின்றன, எந்த நாடுகள் ஈரானுக்கு ஆதரவளிக்கின்றன என்றும் உலகம் உற்று நோக்குகிறது.

இந்தப் போரில் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவதா அல்லது ஈரானுக்கு ஆதரவு வழங்குவதா என்பதில் உலக நாடுகள் பலவும் குழம்பிப் போயுள்ள நிலையில் சில நாடுகள் பகிரங்கமாக அமெரிக்கா, இஸ்ரேலுக்கும் இன்னும் சில நாடுகள் ஈரானுக்கும் ஆதரவு வழங்குகின்றன. ஆனால், யாருக்கு ஆதரவு என்ற முடிவில் இலங்கை மௌனம் காப்பதும், நடு நிலைமைப் போக்கை கடைப்பிடிப்பதும் ஆன்மீகத் தலைவர், பொதுமக்களின் உயிரிழப்புகளைக்கூட கண்டிக்காதிருப்பதும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசியமக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் எதிர்கட்சிகளிடமும் முஸ்லிம் மக்களிடமும் கடும் விமர்சனங்களையும் விசனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் தாக்குதல்கள் தொடர்பில் இலங்கை ஒரு நாடென்ற வகையில் ஏன் தமது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் மேலெழுந்த நிலையில் பாராளுமன்றத்தில் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை “மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அமைதியற்ற நிலைமை” தொடர்பில் விசேட உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அந்த உரையில் கூட இலங்கையினதோ அரசினதோ நிலைப்பாட்டை அறிவிக்காது மேலோட்டமாகவும் பொதுவாகவும் பேசியதுடன் எரிபொருள் தொடர்பில் மட்டும் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தமை எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

“எந்தவொரு யுத்த மோதலும் எந்தவொரு சமூகத்திற்கும் சாதகமாக அமைவதில்லை. உலகில் அவை எந்தளவு அழிவை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிவோம். இந்த யுத்தத்துடன்தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் அமைதியான உலகத்திற்காக அர்ப்பணிப்பு மற்றும் வழிகாட்டல் மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்” இதுதான் ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் தொடுத்துள்ள போர் தொடர்பிலான இலங்கையினதும் அரசினதும் நிலைப்பாடாக ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவின் விசேட உரையில் கூறப்பட்டிருந்தது.

இலங்கையினதும் அரசினதும் இந்த “மதில் மேல் பூனை” நிலைப்பாடு தொடர்பில் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்துள்ளன. “அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் செயற்பாடுகள் தொடர்பில் கடந்த காலங்களில் ஜே.வி.பி கொண்டிருந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல், மிகவும் தந்திரமான முறையில் சந்தர்ப்பவாதியாக மாறி ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார் என்பதே எதிர்க்கட்சிகளினது குற்றச்சாட்டு. அத்துடன் இந்தப்போரில் அமெரிக்கா - இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து ஈரானுக்கு இலங்கை ஆதரவு வழங்க வேண்டும் என்பதே எதிர்க்கட்சிகளின் வலியுறுத்தலாகவுள்ளது.

“மத்திய கிழக்கில் 10 இலட்சம் வரையிலான இலங்கையர் பணியாற்றுகின்றனர். அத்துடன் எரிபொருள் வளம், எரிவாயு வளம் தொடர்பான பிரச்சினைகளும்உள்ளன. இது எமது நாட்டின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கும். இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை என்ன என்று உலகம் பார்த்துக்கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி இந்த சபையில் இது தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். இதன்போது ஈரான் மீது தாக்குதல் நடத்துவது தவறு, அங்கு ஆன்மீக தலைவரை கொலை செய்தது தவறு என்று நாட்டின் ஜனாதிபதியாக இந்த பாராளுமன்றத்தில் யோசனையொன்றை நிறைவேற்றி உலகத்திற்கு செய்தியொன்றை வழங்குவார் என்று நம்பினோம். ஆனால் ஜனாதிபதி அது தொடர்பில் கதைக்காமல், அந்த விடயத்தை தவிர்த்து அமைச்சர்கள் கூற வேண்டிய விடயங்களையே கூறினார்.

ஜனாதிபதி மிகவும் தந்திரமாக சந்தர்ப்பவாதியாக அவரின் அரசியல் செயற்பாட்டில் ஜே.வி.பி கடந்த காலங்களில் கொண்டிருந்த நிலைப்பாட்டை இன்று வெளிப்படுத்தவில்லை. எதிர்க்கட்சியில் இருந்த போது அமெரிக்கா, இஸ்ரேல் உலகில் மற்றைய நாடுகளுக்கு எதிராக முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் அவர்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டை அவதானித்துள்ளோம். அவர்கள் அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். வெனிசுலாவுக்கு தாக்குதல் நடத்தும் போதும் எதிர்ப்பை வெளியிட்டனர். இப்போது எங்கே அந்த வெளிப்படைத்தன்மை?

ஜே.வி.பி போன்ற அரசியல் இயக்கங்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கட்டியெழுப்பி அதனுடாக ஆட்சிக்கு வந்த பின்னர் அது தொடர்பில் இப்போது கதைப்பதில்லை. அது தொடர்பில் கதைக்காமல் ஜனாதிபதி மெதுவாக நழுவிச் சென்றுள்ளனர். இந்த நாட்டில் இதுபோன்ற நிலைமைகளில் அச்சமின்றி தீர்மானங்களை எடுத்த தலைவர்கள் இருக்கின்றனர். மாற்றமில்லாத வெளிநாட்டு கொள்கைகளை கொண்டவர்கள் இருந்தனர். அவர்களை விடவும் நீங்கள் சிறப்பாக இருப்பீர்கள் என்று நினைத்தோம். ஆனால் இப்போது நீங்கள் முழுமையாக காட்டிக்கொடுப்பதையே செய்துள்ளீர்கள். ஈரான் மீதான தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஒரு வசனமேனும் பேசாமல் போய்விட்டார். ஏகாதிபத்தியத்துடன் இணைந்த இஸ்ரேல் சார்பான ஆட்சியாளர்களாக மாறியுள்ளீர்கள்.

நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தால் முதலில் அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் போயிருப்பீர்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் முற்றிலும் மாறிவிட்டீர்கள். ஈரான் என்பது எமக்கு மிகவும் உதவிகளை செய்த நாடு. அபிவிருத்தி நடவடிக்கைகள், எரிபொருள் வழங்கல் ஆகியவற்றில் உதவிகளை செய்துள்ளது. 2015இல் பெற்ற எரிபொருளுக்கான பணத்தையும் இன்னும் செலுத்தி முடிக்கவில்லை. நாங்கள் அந்த நாட்டுக்கு கடன்பட்டுள்ளோம். அவ்வாறான நாட்டுக்காக முன்னிற்பதற்கு எமக்கு முடியாமல் இருக்கின்றது என்பதே எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

ஆனால் எதிர்கட்சியாக இருக்கும்போது தமது விருப்பப்படி எதனையும் செய்யலாம், கூறலாம். யாரையும் ஆதரிக்கலாம், எதிர்க்கலாம். ஆர்ப்பாட்டம் செய்யலாம். அரசாங்கம் என வந்து விட்டால் தமது கட்சியினதோ ஏனைய கட்சிகளினதோ அல்லது நாட்டு மக்களினதோ விருப்பப்படி நடந்து கொள்ள முடியாது. அதற்கென சில விதிமுறைகள், வெளிநாட்டுக் கொள்கைகள், இராஜதந்திரங்கள், அழுத்தங்கள் உள்ளன. அந்தவகையில் ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் தொடுத்துள்ள போரில் யாரையும் ஆதரிக்கவோ, எதிர்க்கவோ முடியாத “இருதலைக் கொள்ளி எறும்பின்” நிலையில்தான் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்ளது.

இலங்கை போரினாலும் பொருளாதாரத்தினாலும் இயற்கையினாலும் மோசமாக பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டுவரும் நாடு என்றவகையில் சகல நாடுகளிடமும் உதவி பெற்றுள்ள ஒரு நாடு. இலங்கையில் நடந்த போருக்கான உதவி, பொருளாதாரத்திற்கான உதவி, அபிவிருத்திக்கான உதவி, இயற்கைப் பேரனர்த்தங்களுக்கான உதவி, எரிபொருளுக்கான உதவி என பலவகை உதவிகளையும் இலங்கை பல நாடுகளிடமிருந்து பெற்றுள்ளது. பெற்று வருகின்றது. அந்த வகையில் தற்போது போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் ஆகிய 3 நாடுகளும் இலங்கைக்கு உதவிகள் வழங்கிய, வழங்கி வரும் நாடுகளில் முன்னிலையில் இருக்கும் நாடுகளாகவுள்ளன.

ஈரானைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகளுடனான இலங்கை அரசாங்கத்தின் போரின்போது இரகசிய இராணுவ கடன்கள் மற்றும் உபகரணங்கள், கண்காணிப்பு விமானங்கள் மற்றும் ட்ரோன்கள் வழங்கியது. இலங்கை இராணுவ நடவடிக்கைகளுக்கு தேவையான எரிபொருளை குறைந்த விலையில் வழங்கியது. இலங்கை இராணுவத்தினர் ஈரானில் பயிற்சிகள் பெற்றனர். ஈரான் இலங்கை அரசை பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும் நாடாக காட்டி, அதிகாரபூர்வ ஆதரவை வழங்கி இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை தடுக்க உதவியது. அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவற்றின் முதலாவது எதிரியாக கருதப்பட்ட ஈரான் ஜனாதிபதியான இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு 2024 ஆம் ஆண்டு செய்த விஜயம் இலங்கை-ஈரான் நெருக்கத்தின் வெளிப்பாடாகவே இருந்தது.

இவை மட்டுமன்றி இலங்கைக்கு ஈரானிடமிருந்து இதுவரை மின்சக்தி, நீர்ப்பாசனம், சுகாதாரம் மற்றும் மனிதாபிமான ரீதியில் பல்வேறு முக்கிய உதவிகள் கிடைத்துள்ளன. இதில் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் இலங்கை மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பின் மிக முக்கியமான அடையாளமாகக் கருதப்படுகிறது. மின் உற்பத்தி திட்டத்தின் மூலம் 120 மெகாவாட் தூய மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் சேர்க்கப்படுகிறது. இதுபோன்று நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி, சுகாதாரத் துறை உதவிகள் என பல் உதவிகளை ஈரான் இலங்கைக்கு வழங்கி வருகின்றது.

இதேபோன்றே அமெரிக்கா இலங்கைக்கு போர், விவசாயம், கல்வி, சுகாதாரம், எரிசக்தி மற்றும் பொருளாதார நிலைத்தன்மை என்பவற்றுக்காக பாரிய நிதியுதவிகள் மற்றும் முதலீடுகளை வழங்கியுள்ளது. வழங்கி வருகின்றது அதுபோன்றே இஸ்ரேலும் இலங்கைக்கு பெரும்பாலும் பாதுகாப்பு, விவசாயம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உதவிகளை வழங்கி வந்துள்ளது. உள்நாட்டுப் போரின்போது ஆயுதங்கள் மற்றும் உளவுத்துறை, இராணுவ பயிற்சிகளை வழங்கியதோடு, விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் அண்மைய காலத்தில் அனர்த்தங்களின்போது மனிதாபிமான உதவிகளையும் வழங்கியுள்ளது. விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசாங்கம் போரில் ஈடுபட்டபோது இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பான மொசாட் இலங்கையில் தளம் அமைத்து இலங்கை இராணுவத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் பல்வேறு உதவிகளை செய்து வந்தது.

ஆக மொத்தத்தில் இலங்கைக்கு நண்பர்களாகவிருந்து கடன்கொடுத்தவர்கள், பொருளாதார, இராணுவ ரீதியில் உதவியவர்களிடையில் ஏற்பட்டுள்ள போரில் அவர்களிடம் உதவிகளை பெற்றவர்கள் என்ற வகையில் யாருக்கு ஆதரவளிப்பது, யாரைக் கண்டிப்பது என்பதில் இலங்கை என்ற அடிப்படையில் அரசாங்கமாக முடிவெடுப்பது உண்மையில் அநுரகுமார அரசாங்கத்திற்கு இராஜதந்திர சிக்கல்கள் நிறைந்த விடயம்தான். “ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம்...இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்” என்பதுபோன்ற சிக்கலில் தற்போது இலங்கை மாட்டிக் கொண்டுள்ளது.

அதுமட்டுமன்றி இலங்கை கடற்பரப்புக்கு அண்மையில் வைத்து ஈரான் கடற்படைக் கப்பல் அமெரிக்காவால் தாக்கி அழிக்கப்பட்ட போது அந்தக் கப்பலில் இருந்து காயமடைந்த ஈரான் கடற்படை வீரர்களை இலங்கை காப்பாற்றிய நிலையில் அது தொடர்பிலான நெருக்கடிகளையும் இலங்கை அரசு எதிர்கொண்டுள்ளதுடன் அமெரிக்கா இந்த தாக்குதலை நடத்த இலங்கை மறைமுக அனுமதியை வழங்கியதாக ஒரு தரப்பினரும் ஈரான் கடற்படையினரை காப்பாற்றியதன் மூலம் இலங்கை ஈரானுக்கே ஆதரவளிப்பதாக இன்னொரு தரப்பினரும் விமர்சனங்களை முன்வைப்பது இலங்கையின் நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. அத்துடன் இன்னும் ஒரு ஈரான் கடற்படைக்கப்பல் இலங்கை துறைமுகம் ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் இன்னொரு ஈரான் போர்க்கப்பல் சில மணிநேரம் இலங்கை துறைமுகத்தை பயன்படுத்த அனுமதி கேட்டதாகவும் வெளிவரும் செய்திகளும் இலங்கையை மேலும்மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவருகின்றது.

கடும் விமர்சனங்கள் மூலம் தற்போதைய அநுரகுமார அரசை ஈரானுக்கு ஆதரவளிக்க வைத்து அமெரிக்காவுடன் பகைக்க வைப்பது, அவ்வாறு ஈரானுக்கு அநுரகுமார அரசு பகிரங்கமாக ஆதரவளிக்க மறுத்தால் அநுரகுமார அரசை அமெரிக்காவின் அடிமைகள் என முத்திரை குத்தி விமர்சிப்பதன மூலம் இலங்கை முஸ்லிம்களை அரசுக்கு எதிராக திருப்புவது என்ற இரு நோக்கங்களை நிறைவேற்ற இலங்கையின் எதிர்க்கட்சிகள் ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் போரைக் கையில் எடுத்துள்ளதாலும் போரில் ஈடுபடும் 3 நாடுகளும் இலங்கைக்கு மிகவும் வேண்டப்பட்ட நாடுகள் என்பதாலும் அநுரகுமார அரசு கொஞ்சம் திணறத்தான் செய்கின்றது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# காலம் காலமாக எங்களை அடக்கி ஆளும் சட்டம் நீக்கப்பட வேண்டும் என வேலன் சுவாமிகள் தெரிவிப்பு!



காலம் காலமாக எங்களை அடக்கி ஆள்வதற்கு சிங்கள அரசுகள் பயன்படுத்திய சட்டங்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். அவ்வாறு நீக்கி எமக்கான சுமூகமான, நல்லிணக்கமான சூழல் ஏற்படுத்தப்பட்டால் மட்டும்தான் நாங்கள் அரசியல் தீர்வு பற்றி கதைக்க முடியும் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர்களில் ஒருவரான தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

3ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை (03-03-2026) இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அன்றாட வாழ்க்கையில் இருக்கக்கூடிய சவால்களை நீக்காமல் இந்த சட்டத்திற்குள்ளே எங்களை அடிமையாக வைத்துக்கொண்டு இன்னொரு சட்டமான ஆறாம் திருத்த சட்டத்தின் ஊடாக கருத்து சுதந்திரத்தை அடக்கி வைத்துக் கொண்டு பேச வாருங்கள் என்றால், சட்டங்களாலே அடக்கி வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு சமூகம் எவ்வாறு சுதந்திரமாக பேச முடியும்?

ஆகவே இதற்காக தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி போராடுகின்றோம். ஐக்கிய நாடுகள் சபையாக இருக்கலாம், ஐரோப்பிய யூனியனாக இருக்கலாம், சர்வதேச நாணய நிதியமாக இருக்கலாம், இலங்கையில் செல்வாக்கு செலுத்தும் ஏனைய சர்வதேச நாடுகளாக இருக்கலாம் இவை அனைத்தும் இலங்கை அரசுக்கு அழுத்தத்தை கொடுப்பதன் ஊடாக தான் இந்த சட்டங்களை நீக்கவும், எமக்கு உதவி செய்யவும் முடியும்.

ஆகவே பேதங்கள் கடந்து எமது மக்கள் தமிழர்களாக ஒன்றிணைந்தது மகிழ்ச்சிக்குரியது. ஆகவே எமது இலக்கு அடையும் வரை இவ்வாறான போராட்டங்கள் தொடரும் என்றார்.

# யாழ்ப்பாணம் – தையிட்டி பகுதியில் இருந்து காணாமல் போன மீனவர்கள் தொடர்பாக கடற்படையினர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என உறவுகள் குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம் - தையிட்டி பகுதியில் இருந்து கடந்த 27ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற மீனவர்கள் இருவர் இதுவரை திரும்பி வரவில்லை என அவர்களது உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தங்கராசா அமல்ராஜ் (வயது 44), செல்வராசா ராஜ்குமார் (வயது 30) என்ற இரண்டு மீனவர்களுமே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அந்த மீனவர்களது உறவுகள் கருத்து தெரிவிக்கையில், அவர்கள் கடலில் இரண்டு நாட்கள் தங்கி இருந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கரையை வந்தடைந்திருக்க வேண்டும். இருப்பினும் இன்றுவரை திரும்பி வரவில்லை.

அவர்கள் இருவரையும் இந்திய மீனவர்கள் கடலில் கண்டதாகவும், அவர்களுக்கு சாப்பாடு கொடுத்தாகவும் கூறினர். இந்திய எல்லையில் நின்றால் இந்திய கடற்படையினர் கைது செய்து விடுவார்கள் என்றும், ஆகையால் கரையோரமாக செல்வதாகவும் அவர்கள் தங்களுக்கு கூறிவிட்டு சென்றதாக இந்திய மீனவர்கள் தெரிவித்தனர்.



இதுகுறித்து நாங்கள் கடற்படையினர், பொலிஸார் என அனைவருக்கும் தெரியப்படுத்தியும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கவில்லை.

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் காணாமல் போன நிலையில் அவரை உலங்குவானூர்தி மூலம் மீட்டனர். அதுபோல இவர்களையும் ஏன் காப்பாற்ற கூடாது? இதுவரை கடற்படை எந்தவொரு தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

இதுவரை 3500 லீட்டர்கள் எரிபொருளை பயன்படுத்தி நாங்களே தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டோம். எல்லை தாண்டி சென்று தேடவும் முடியாது. நாங்கள் தேடி சென்றவேளை இந்திய கடற்படையினர் எங்களை விரட்டினர்.

எனவே அவர்களை உயிருடன் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.



# அல் கெமனியின் படுகொலை மற்றுமொரு ஒரு யுத்த அத்தியாயத்தின் ஆரம்பமா?

## மொசாட்டின் வெற்றியா? ஈரானிய உளவு அணியின் தோல்வியா?



தற்போது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் நிலைமை தீவிரமடைந்து வருவது உலக கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக, ஈரானை மையமாகக் கொண்ட சமகால பதற்றங்கள் மிகவும் கவலைக்கிடமாக மாறியுள்ளன. இஸ்ரேல் மற்றும் அதனுடன் இணைந்த அமெரிக்கா, ஈரானின் பல முக்கிய இலக்குகளை குறிவைத்து வான்வழி தாக்குதல்களை 28.02.2026 சனிக்கிழமை அதிரடியாக நடத்தியது. ஈரானின் பல இடங்களில் இடம்பெற்ற இந்த தாக்குதல்களில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

தாக்குதல்களின் முக்கிய குறிக்கோளாக விளங்கிய, ஈரானின் அதியுச்ச தலைவராகவும் மற்றும் ஆன்மீக தலைவராகக் கருதப்படும் சுப்ரீம் லீடர் அல்கமேனி அவர்கள் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகின. இதையடுத்து ஈரான் அரசு 40 நாள் தேசிய துக்க தினத்தை அறிவித்து, அவருக்கான இறுதி அஞ்சலிகளை அரச மரியாதையுடன் நடத்தி வருகிறது. மேலும், பழிவாங்கும் உறுதியை வெளிப்படுத்தும் வகையில் சிவப்பு கொடி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர், ஈரானிலிருந்து பல ஏவுகணைகள் ஏவப்பட்டதாகவும், குறிப்பாக மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் அமைந்துள்ள நாடுகள் குறிவைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதனால் பிராந்திய ரீதியாக பதற்றம் அதிகரித்து வருகிறது.

இதன் பின்னணியை ஆராய்ந்தால் சுமார் 35ஆண்டுகளுக்கும் மேலாக ஈரானின் சுப்ரீம் லீடராக பதவி வகித்த அல்கமேனி அவர்கள் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டினால் சர்வதேச அரசியல் அரங்கில் முக்கிய பாத்திரமாகக் காணப்பட்டவர். பல அமெரிக்க ஜனாதிபதிகளைத் தாண்டியும் அதிகாரத்தில் தொடர்ந்த அவர், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான சவாலான குரலாக இருந்து வந்தார். அமெரிக்கா இஸ்ரேலுக்கு கண்ணுக்குள் விரல் விட்டு ஆட்டி வந்திருக்கிறார். இந்நிலையில், அவரின் படுகொலை எவ்வாறு நிகழ்ந்தது? எந்தத் திட்டத்தின் கீழ் இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது? என்பது பல கேள்விகளை எழுப்புகிறது.

அல் கமேனியின் முடிவு பற்றி ஈரான் சற்றும் எதிர்பார்த்திரா நேரத்தில் மிக நேர்த்தியாக அதிரடியாக அவரை முடித்திருக்கிறது இஸ்ரேல் - அமெரிக்க கூட்டு. இது மொசாட் மற்றும் CIA களின் வெற்றியாகவும் ஈரானிய உளவி பிரிவின் தோல்வியாகவும் பார்க்கப்படுகிறது.

தாக்குதல்களை ஈரான் எதிர்பார்க்காமல் இருந்தமைக்கு பல தர்க்க ரீதியான காரணங்களை ஈரான் கொண்டிருந்தது. அது தான் அவர்களின் இழப்புக்கு காரணமாகி விட்டிருக்கிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இரண்டு நாள் அதிகாரப்பூர்வ சுற்றுப்பயணமாக இஸ்ரேலில் தங்கி இருந்தார். அவருக்கு அங்கு உயரிய மரியாதைகள் வழங்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் சிறப்பு கௌரவமும் அளிக்கப்பட்டது. அதே நேரத்தில், ஈரான் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் இடையே சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று கொண்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. மேலும், அது நோன்பு காலமாக இருந்ததால் அந்த நேரத்தில் தாக்குதல் நடைபெறாது என்ற நம்பிக்கையும் ஈரான் தரப்பில் இருந்திருக்கலாம். அதேபோல், இந்திய பிரதமர் இஸ்ரேல் மண்ணில் இருக்கும் தருணத்தில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பெரிய ராணுவ நடவடிக்கை எடுக்கப்படாது என்ற அரசியல் கணிப்பும் இருந்திருக்கலாம். இதனால், உடனடி போர் நடவடிக்கைகள் இருக்காது என்ற மனநிலையே உருவாக்கப்பட்டிருந்ததாக இராணுவ வல்லுனர்கள் கணிக்கின்றனர்.

ஆனால், இப்படியான சமிஞைகளை வெளிப்படுத்தி கொண்டு இந்த எல்லா சூழ்நிலைகளும் ஒரு திரைமறைவு அரசியல் தந்திரமாக பயன்படுத்தப்பட்டதாக ஓர் போரியல் தந்திரமாக இஸ்ரேல் - அமெரிக்காவால் இணைந்த தாக்குதலாக நிகழ்த்தப்படிருபது வெளிப்படையாக தெரிகிறது.

பிராந்தியத்தில் எந்த பதற்றமும் இல்லை என்ற மாய தோற்றத்தை உருவாக்கி, அதற்கிடையில் திடீர் வான்வழி தாக்குதல்களை நடத்தியது. அதன் விளைவாக ஈரானின் உச்ச தலைவர் அல்கமேனி அவர்கள் மிகத் துல்லியமான ஏவுகணை தாக்குதலால் கொல்லப்பட்டார்.

பல அடுக்குகள் கொண்ட பாதுகாப்பு பதுங்கு குழியிலிருந்தபோதும், அந்த பாதுகாப்பை ஊடுருவி சென்ற ஏவுகணைகள் இலக்கை துல்லியமாகத் தாக்கியதாக கூறப்படுகிறது. இதன் மூலம், இஸ்ரேலின் மொசாட் உளவுத்துறை மற்றும் அமெரிக்காவின் CIA உளவுத்துறைக்கு மிகத் துல்லியமான தகவல்கள் கிடைத்திருந்திருக்கிறது குறிப்பாக, உச்ச தலைவர் கமெனி எப்போது எங்கு இருப்பார், அவரின் அன்றாட அசைவுகள் என்ன என்பதற்கான தகவல்கள் மிகவும் நுணுக்கமாக சேகரிக்கப்பட்டிருக்கிறது. ஈரானின் உள்நாட்டுக்குள் இருந்து தகவல்கள் வெளியேறியிருக்க வாய்ப்பு உள்ளதா? உளவுத்துறை ரீதியாக எவ்வாறு ஊடுருவல் நடைபெற்றது? என்பது தற்போது சர்வதேச அரசியல் வட்டாரங்களில் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

உள்நாட்டு மட்டத்திலேயே தகவல் கசிவுகள் இடம்பெற்றிருக்க வாய்ப்பு இருப்பதாகவும் தற்போது பல்வேறு தரப்புகளில் விவாதிக்கப்படுகிறது. குறிப்பாக,ஈரானுக்குள்ளிருந்தே சில தகவல்கள் வெளியேறியிருக்கலாம் என்ற சந்தேகமும் முன்வைக்கப்படுகிறது. கமெனியின் அத்தனை அசைவுகளும் கண்காணிக்கப்பட்டு இருக்கின்றன ஆக அவர் பாதுகாப்பு வளையத்துக்குள்ளேயே கருப்பாடுகள் அல்லது மொசாட்டின் ஆழமான ஊடுறுவல் இருந்துருக்கிறது.

மேலும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், அல் கமெனி அவர்கள் குண்டுவீச்சுத் தாக்குதலில் உயிரிழந்தார் என்ற தகவலை ஆரம்பத்தில் ஈரான் அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை. முதன்முதலில் இந்தச் செய்தியை அறிவித்தவர்கள் அமெரிக்காவின் முன்னாள் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின்நெதன்யாகு ஆவார். இருவரும் தனித்தனியாக அவர் உயிரிழந்துவிட்டார் என்று உறுதியான வகையில் அறிவித்தனர்.



ஆரம்பத்தில் இந்த தகவலை மறுத்த ஈரான் பின்னர் இடிபாடுகளுக்குள் இருந்து உடலை மீட்டெடுத்து உறுதிப்படுத்திய பின்னரே மிகவும் சோகமான செய்தி என அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

டொனால்ட் ட்ரம்ப் மற்றும் நெதன்யாகு ஆகியோர் மிகுந்த நம்பிக்கையுடன் உலகத்திற்கு அறிவித்திருந்ததன் பின்னணியில், தாக்குதல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதற்கான உறுதிப்படுத்தல்கள் அவர்களிடம் இருந்திருக்க வேண்டும் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். அதாவது தாக்குதல் முடித்து கமெனி கொல்லப்பட்டது ஒளிப்படம் வாயிலாகவோ என்னவோ உறுதிப்படுத்தப்பட்டிருக்க வாய்ப்புக்கள் அதிகம்.

தாக்குதல் இடம்பெற்ற பின்னர், சம்பவ இடத்தின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டதாகவும் அவை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே ஊடகங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதன் மூலம், அவர்களின் புலனாய்வு அமைப்புகள் ஈரானுக்குள் எவ்வளவு ஆழமாக செயல்பட்டிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகிறது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள ராஜதந்திரம், உளவுத்துறை நடவடிக்கைகள், மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் செயல்திறன் ஆகியவை ஆழ்ந்த அரசியல் ஆய்வுக்குரிய விடயங்களாகும்.

ஈரானின் உச்ச தலைவராக இருந்து, அமெரிக்காவுக்கு திறந்த சவால் விடுத்தவராகக் கருதப்பட்ட ஒருவரின் பாதுகாப்பு அமைப்பு எவ்வளவு வலுவாக இருந்திருக்க வேண்டியது. அந்த பாதுகாப்பை மீறி, அவரின் அன்றாட அசைவுகள் வரை துல்லியமாக கண்காணிக்கப்பட்டு, சரியான தருணத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறதே என்றால் அது அமெரிக்காவின் CIA மற்றும் இஸ்ரேலின் மொசாட் உளவுத்துறைகளின் திட்டமிட்ட செயல்பாடாகவே பார்க்கப்படுகிறது. மொசாட்டின் வெற்றியாகவும்

இதே நேரத்தில், இது ஈரானிய உளவுத்துறை அமைப்பின் கடுமையான தோல்வியாகவும் மதிப்பிடப்படுகிறது.

உச்ச மட்ட பாதுகாப்பு சூழலில் இருந்த ஒருவரின் தகவல்கள் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளுக்கு எவ்வாறு சென்றன என்பது எதிர்காலத்தில் தீவிரமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

ஒரு நாட்டின் உச்ச தலைவரை பாதுகாப்பது என்பது சாதாரண பாதுகாப்பு நடைமுறை அல்ல. அது பல அடுக்குகள் கொண்ட உளவுத்துறை, எதிர் - உளவு அமைப்பு மற்றும் ரகசிய கண்காணிப்பு செயல்முறைகளின் ஒருங்கிணைப்பாக அமையும். இந்தச் சம்பவத்தின் பின்னணியை பார்க்கும்போது அந்த பாதுகாப்பு வளையத்தில் எங்கு தவறு ஏற்பட்டது என்பதே முக்கியமான கேள்வியாகிறது.ஈரானின் உளவு அமைப்பின் ஓட்டைகளை இவை காட்டுகின்றது.

கமெனியின் மறைவுக்கு பின் ஈரான் பதிலடி தாக்குதல்களை மேற்கொண்டிருந்தாலும் இஸ்ரேலின் இராணுவ நிலைகள் மற்றும் அயல் நாட்டு அமெரிக்க தளங்கள் உள்ள நாடுகளின் பொருளாதார மையங்களை குறிவைத்திருந்தாலும் உச்ச தலைவரை இழந்துள்ளமை அவர்களுக்கு மிகப்பெரிய மனரீதியான மற்றும் அரசியல் தாக்கமாகவே பார்க்கப்படுகிறது.

ஒரு நாட்டின் தலைமைச் சின்னமாகக் கருதப்படும் நபர் இழக்கப்பட்டிருப்பது எந்த பதிலடி தாக்குதலாலும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

ஈரான் ஒருபோதும் அல்கமேனி அவர்களை நேரடியாக இலக்கு வைப்பார்கள் என்று கணித்திருக்க வாய்ப்பில்லை என்றே பலர் கருதுகின்றனர். குறிப்பாக, சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று கொண்டிருந்த சூழலில் அத்தகைய நேரடி தாக்குதல் நடக்காது என்ற நம்பிக்கை இருந்திருக்கலாம். மேலும், இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இஸ்ரேலில் தங்கி இருந்த காலகட்டத்தில் மத்திய கிழக்கு பிராந்தியம் ஒப்பீட்டளவில் அமைதியாக இருக்கும் என்ற அரசியல் கணிப்பும் ஈரான் தரப்பில் இருந்திருக்கலாம். இத்தகைய மதிப்பீடுகளே பாதுகாப்பு கணிப்பில் ஒரு பெரிய தவறாக மாறியிருக்கலாம்.

இந்தச் சம்பவம் மொசாட் உளவுத்துறையின் திட்டமிட்ட வெற்றியாகக் கூறப்படுகின்றது. அதேவேளை, ஈரானிய உளவுத்துறையின் கடுமையான தோல்வியாகவும் மதிப்பிடப்படுகிறது. ஏனெனில், தாக்குதல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதற்கான ஆதாரங்களை உறுதிப்படுத்திய பின்னரே அமெரிக்க மற்றும் இஸ்ரேல் தரப்பில் இருந்து திடமாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டதாக கூறப்படுகிறது. உடல் மீட்பு மற்றும் இடிபாடுகள் உறுதிப்படுத்தப்பட்ட பிறகே ஈரான் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது என்பதும் குறிப்பிடப்படுகிறது.

இது உளவுத்துறை திறன் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் செயல்திறன் குறித்து அரசியல் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய ஒரு முக்கியமான நிகழ்வாகும். இந்தப் போராட்டத்தில் ஈரானின் இறையாண்மை மீறப்பட்டதாக கூறப்படலாம். ஆனால் போரியல் உத்தி ரீதியாக, பிராந்தியத்தில் எந்தத் தாக்குதலும் நடைபெறாது என்ற நம்பிக்கையை உருவாக்கி, பாதுகாப்பான சூழல் என்ற தோற்றத்தை காட்டி, பின்னர் திடீர் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது ஒரு தந்திரமான ராணுவ நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

(தொடர்ச்சி 19 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொக்கட்டிச்சோலையில் 14 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கிய உறவினர் ஒருவருக்கு 10 வருட சிறைத் தண்டனை விதித்த மேல் நீதிமன்றம் தீர்ப்பு

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் ஒன்றைவிட்ட சகோதரியின் மகளான 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 55 வயதுடைய ஒருவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே,பிரபாகரன் கடந்த மாதம் 26ம் திகதி தீர்ப்பளித்தார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுமியை கடந்த 2014ம் ஆண்டு யூன் மாதம் 21ம் திகதி பாலியல் துஷ்பிரயேதகம் செய்த குற்றச்சாட்டில் குறித்த சிறுமியின் மாமா முறையான குறித்த நபரை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளார்.

குறித்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில் குறித்த வழக்கு கடந்த பெப்பிரவரி 26ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது குறித்த நபர் ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் மூலம் குற்றவாளியாக கண்டறியப்பட்டதையடுத்து அவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டணையும் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

# மட்டக்களப்பில் 18 பேருக்கு டெங்கு நோய் காரணமாக வீடுகள் மற்றும் காணிகளை சுத்தம் செய்யுமாறு வைத்திய அதிகாரி கோரிக்கை



மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவிலுள்ள கொக்குவில், மற்றும் கோட்டமுனை பிரதேசங்களில் 18 பேர் டெங்கு நுளம்பு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதுடன் சிக்கன் கூனியா நோய் தாக்குத்துக்கு உள்ளாகி வருகின்றனர் எனவே பொதுமக்கள் வீடுகள் மற்றும் தமது காணி வெற்று காணிகளை துப்பரவு செய்யுமாறு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பணிப்பாளர் வைத்தியர் இளைதம்பி உதயகுமார் கேரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு நகர்பகுதியில் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளான கொக்குவில் மற்றும் கோட்டமுனை பிரதேசங்களில் உள்ள வீடுகளை சோதனையிடும் நடவடிக்கை ஒன்றை 5ம் திகதி அன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் பொலிசார் மற்றும் மாநகரசபை, கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர் ஒன்றினைந்து மேற்கொண்டனர்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பணிப்பாளர் வைத்தியர் உதயகுமார் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் சில வாரங்களுக்கு முன்னர் தொடர்ச்சியாக மழை பெய்த காரணமாக காரணமாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது.

இ த ற ் க ை ம ய கொக்குவில், மற்றும் கோட்டமுனை பிரதேசங்களில் ஒவ்வொரு நாளும் 3 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றதுடன் கொக்குவில் பிரதேசத்தில் 12 டெங்கு நோயாளர்களும் கோட்டமுனை பகுதியில் 6 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே கண்டுபிடிக்கப்பட்ட நோய் தாக்கத்துக்கு உள்ளானவர்களின் பகுதிகளில் டெங்கு நுளம்பு குடம்பிகளை அகற்றும் பணியை முன்னெடுக்கும் நடவடிக்கை ஒன்றை எடுத்து வருகின்றோம்.

இதனால் நோய் கட்டுபாட்டுக்குள் கொண்டுவரக் கூடியதாக இருக்கின்றது இருந்தாலும் பொது மக்கள் தங்களது வீடுகள், காணிகள் மற்றும் பராமரிப்பு இல்லாமல் உள்ள வெற்றுக் காணிகள் மற்றும் தொடர்ந்து பூட்டியுள்ள வீடுகளின் உரிமையாளர்கள் உடனடியாக டெங்கு நுளம்பு பரவும் இடங்களை துப்பரவு செய்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அவ்வாறு ஒத்துழைப்பதன் மூலம் டெங்கு நுளம்பை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரமுடியும் என்பதுடன் சிக்கன் கூனியா நோயாளர்களும் தொடர்ச்சியாக பதிவாகியுள்ளனர் அதுவும் நுளம்பால் பரவக் கூடியது என்றார்.

# இலங்கை ஜனாதிபதியின் மற்றுமொரு காருண்யச் செயற்பாடு

## ஈரான் கடற்படையின் இரண்டாவது கப்பலில் இருந்த படையினர் அனைவருத் கொழும்பில் தரையிறக்கப்பட்டனர்

- ந.லோகதயாளன்



ஈரானின் இரண்டாவது கப்பலில் இருந்த அனைவரும் கொழும்பில் தரையிறக்கப்பட்டுள்ளனர் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் தற்போது நிறுத்தப்பட்டுள்ள ஈரானிய இரண்டாவது கப்பலான புஷேரின் (Bushehr) கொழும்புத் துறைமுகத்திற்குள் உள்ளே நுழைய அனுமதி வழங்கப்பட்டது.

ஈரானியக் கடற்படையின் ஒரு கப்பல் அமெரிக்காவால்இலங்கைக் கடலில் தகர்க்கப்பட்டது. இதன் பின்பு இலங்கையை அண்மித்த இரண்டாவது ஈரானியக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்குள் உள் நுழைய அனுமதி கோரியது.




ஈராணிய கப்பலால் கோரப்பட்ட அனுமதி தற்போது இலங்கை அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதயின் பிரகாரம் கப்பலில் இருந்த 208 பணியாளர்களும் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டுள்ளனர்.

பணியாளர்கள் கொழும்பில் தரையிறங்கியதும் கப்பல் திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்க இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அனுமதி வழங்கியுள்ளார்.

# சுந்தர் சி — விஷால் கூட்டணியில் உருவாகும் படம் "புருஷன்"



இயக்குநர் சுந்தர் சி. இயக்கத்தில் ஹிப் ஹாப் ஆதியின் துடிப்பான இசையில் விஷால் நடிப்பில் கடந்த 2015-ம் ஆண்டு வெளியான படம் “ஆம்பள”. சந்தானம் நகைச்சுவை இப்படத்தின் உச்சக்கட்டம்.

இதே பாணியில் சுந்தர் சி - விஷால் கூட்டணியில் எடுக்கப்பட்ட “மதகஜராஜா“ படமும் வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து தற்போது சுந்தர் சி இயக்கத்தில் விஷால் நடிக்கும் புதிய படத்திற்கு “புருஷன்“ என பெயரிடப்பட்டுள்ளது. ஹிப்ஹாப் ஆதி இசையில் உருவாகும் இப்படத்தின் முன்னோட்டத்தை கடந்த மாதம் படக்குழு வெளியிட்டது. முன்னோட்டத்தில், மனைவிக்கு பயந்த கணவனாக விஷாலும், கணவனை வீட்டு வேலைகளை செய்யச் சொல்லி மிரட்டி எடுக்கும் மனைவியாக தமன்னாவும், மேலும் இப்படத்தில் யோகி பாபுவும் நடித்து இருந்தனர். தமிழ் மற்றும் தெலுங்கில் உருவாகும் இப்படத்தை அவ்னி சினிமாக்ஸ், பென்ஸ் மீடியா இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு கோபி அமர்நாத் ஒளிப்பதிவு செய்கிறார். இந்த நிலையில், “புருஷன்“ படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி உள்ளதாக நடிகர் விஷால் தெரிவித்துள்ளார்.

## உன்னால் முடியும்

முடியாது என்பது மூடத்தனம்
முடியும் என்பதே மூலதனம்
முடிவு வருவது நிச்சயம்
மடியும் வரையும் போராடு
அடிமேல் அடியை அடித்தால்
அம்மியும் நகரும் அன்றோ
அடிகளை நீயும் அளந்தால்
அடைவாய் இலக்கை இலகுவில்!

நடக்காது அவநம் பிக்கை
நடக்கும் தன்னம் பிக்கை
கடக்க சிரமமென கருதாதே
கடந்து காட்டிப் பேறெடு
இடக்கு முடக்காய் இயம்புவார்
எதையும் காதில் வாங்காதே
மடக்கச் சிலபேர் முயலுவார்
மலைபோல் நிமிர்ந்து நின்றுபார்!

உந்தன் எதிரி உலைவு
உடனே அவனை விரட்டிடு
பந்த நண்பன் பயிற்சியே!
பரிவுடன் அணைத்து வைத்திடு
எந்த இடரு வருகினும்
எடுத்த கருமம் விடாதே!
அந்தகன் அருகில் வந்தாலும்
அவனையும் எதிர்க்கத் தயங்காதே!

வெற்றியைத் தேடி விரையாதே!
வலிந்தது வாசல் வந்திடுமே
மற்றவர் உன்னை மடக்கலாம்
மனதைத் தளர விடாதே!
சற்றுத் தயங்கி நின்றால்
தளர்ச்சி உன்னைத் தடுத்திடும்
கற்றவர் உன்னைக் கவனிப்பர்
கலங்காக் காலடி எடுத்து வை!

(அந்தகன் – இயமன் உலைவு – ஊக்கமின்மை)

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

VILLA KARUNA HOME FOR SENIORS
Proudly Presents

Santhiyaragam

GOLDEN SUPER SINGER
Season 8
AUDITION

DATE: SUNDAY, MARCH 8, 2026
TIME: 10:00 AM – 2:00 PM
VENUE: 7340 MARKHAM ROAD, MARKHAM
REGISTER BEFORE MARCH 5, 2026
Inthu – 416-282-4535 | Kiruba – 416-564-4366 | Indrani – 416-200-6971




Calling all 55+ years old!
Come showcase your voice and be part of this exciting musical journey!




*(17 பக்கத் தொடர்ச்சி)*

## *அல் கெமனியின் படுகொலை மற்றுமொரு ஒரு யுத்த அத்தியாயத்தின் ஆரம்பமா?*

**மொசாட்டின் வெற்றியா? ஈரானிய உளவு அணியின் தோல்வியா?**

---------------------------------------------------------------------------------
--

ஆனால் சர்வதேச நடைமுறைகளின் அடிப்படையில், போர் நடவடிக்கைகள் பொதுவாக அதிகாரப்பூர்வ எச்சரிக்கை அல்லது அறிவிப்புகளுக்குப் பிறகே முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடும் உள்ளது. இச்சம்பவத்தில், யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுவதால், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்புகள் மிக நுணுக்கமாகவும் திட்டமிட்ட வகையிலும் செயல்பட்டிருக்கின்றன என்ற மதிப்பீடு முன்வைக்கப்படுகிறது.

இந்நிலையில், ஈரான் பழிவாங்கும் நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சிவப்பு கொடியை ஏற்றி இருப்பது கவனிக்கத்தக்கது. உச்ச தலைவரை இழந்ததன் பின்னர், தலைமையற்ற நிலை ஏற்பட்டு படைகள் சிதறிவிடும் என சிலர் கருதியிருக்கலாம். வரலாற்றுப் போர்களிலும் இலக்கியப் பின்னணிகளிலும் கூட "தலைமையை இலக்கு வைத்தால் படை பலவீனமடையும்" என்ற உத்தி காணப்படுகிறது.

ஆனால், அல்கமேனி அவர்கள் தமக்குப் பின்னர் பொறுப்பேற்கும் தலைமைக் கட்டமைப்பை முன்கூட்டியே வடிவமைத்திருந்ததாக கூறப்படுகிறது. உயர்மட்டத் தலைமை அல்லது தளபதிகள் உயிரிழந்தால் அடுத்த கட்ட கட்டளை யாருக்கு செல்ல வேண்டும் என்ற தெளிவான அமைப்பு உருவாக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், உடனடி தலைமையற்ற குழப்பம் ஏற்படாமல் தடுக்கப்பட்டிருக்கலாம்.

தற்போது ஈரான் 40 நாள் துக்க தினத்தை அனுசரித்து வருகிறது. இறுதி அஞ்சலிகள் நிறைவடைந்த பின், ஈரான் எவ்வாறு பதிலடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பது சர்வதேச அரசியல் வட்டாரங்களில் கவனிக்கப்படும் முக்கிய அம்சமாக உள்ளது. இதேவேளை, சீனா தனது ஆதரவை ஈரான் சார்பாக வெளிப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதே நேரம் இஸ்ரேல் -அமெரிக்க கூட்டுக்கும் அவர்கள் சார்ந்த நட்பு நாடுகள் ஆதரவை தெரிவித்து நிற்கின்றன.

மொத்தத்தில் பார்க்கும்போது, ஈரானின் உச்ச தலைவரின் உயிரிழப்புடன் இந்தச் சம்பவம் முடிவடைந்ததாக கூற முடியாது. மாறாக, அந்த நிகழ்வின் பின்னரே புதிய அரசியல் மற்றும் ராணுவ அத்தியாயம் தொடங்கியிருக்கிறது என்றே பலர் கருதுகின்றனர். இது மூன்றாம் உலகப்போருக்கான பாதையைத் திறக்குமா? எந்த நாடுகள் எந்த அணியில் இணைவதற்கான வாய்ப்பு உள்ளது? உலக பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு நிலைமையில் என்ன விளைவுகள் ஏற்படலாம்? போன்ற கேள்விகள் இப்போது எழுகின்றன.

மொத்தத்தில் அல் கமெனியின் முடிவு ஓர் முடிவல்ல அது ஏதோ ஒன்றுக்கான தொடக்கம்.

**கு.மதுசுதன் -- B.Sc(Hons), M.Sc**
**அரசியல் ஆய்வாளர்**

# இவ்வார ராசிபலன்

**06-03-2026 வெள்ளி தொடக்கம் 12-03-2026 வியாழன் வரையும்**




**மேஷம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும், கிளர்ச்சியும் உருவாகக்கூடிய வாரம். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சியுண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உறவினரால் தொல்லை நேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை நேரும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். உடல் உபாதை ஏற்பட்டு தீரும். வருமானம் சேரும். நிர்வாக பொறுப்பு கூடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமைகள் குறையும். வியாபாரம் மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தீய எண்ணங்கள் விலகும். எள் தானம் ஏற்றம் தரும். தேவைகள் பூர்த்தியாகும். அரசு பணியில் மாற்றம் வரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். உடல் சோர்வு ஏற்பட்டு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 7,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**ரிஷபம்:** பணவரவு லாபம் தரும் வாரம். புத்தி சாதுர்யம் கூடும். புத்திர வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். அரசு உதவிகள் கிட்டும். விவசாய விளைச்சல் அதிகமாகும். வில்லங்கம் விலகும். வியாபாரம் உயரும். ஆலய தரிசனம் ஆறுதல் தரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கன்னியம் கூடும். பூர்வீக சொத்து வரும். தொழில் சிக்கல் மறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். எதிர்பாராத நன்மை கிட்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மன அமைதி தரும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழிலமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும் வகையில் அமையும். ஊக்கம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாளைய கனவு நனவாகும். குதூகலம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,O




**மிதுனம்:** சந்தோஷமான நிகழ்வு தரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. முயற்சிகள் அதிகம் தேவை. திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வராத கடன் வந்து சேரும். பண வரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமி'ன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். பட்டம், பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத வாரம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சி பலன் தரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,1,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கடகம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கக்கூடிய வாரம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும்.


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 2,1,6,4
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,T




**சிம்மம்:** செல்வாக்கு உயரக்கூடிய வாரம். உடல்பொலிவு கூடும். உற்சாகம் கலை கட்டும். வேலைபளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சூழ்நிலைகள் சமாளிக்க சூரிய வழிபாடு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகள் தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கண் நோய் வந்து போகும். கவலைகள் ஒழியும். கால்நடைகளால் லாபம் உண்டு. வியாபார விருத்தி ஏற்படும். வேற்றுமை விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,5,8
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,P




**கன்னி:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பணப்பற்றாக்குறை தீரும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். வாழ்வில் வசந்தம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். தடைகள் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிர்கால சிந்தனை ஏற்றம்பெறும். குதூகலமான மனநிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,3,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**துலாம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். வாக்குவாதங்கள் உருவாகி மறையும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உறவினர் வருகை உண்டு. உற்சாகம் கலைகட்டும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் தரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சீராகும். முகப்பொலிவு கூடும். திட்டமிட்ட செயல் வெற்றிப் பெறும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். அரசு வழி ஆதாயம் பெருகும். பணியில் உயர்வு உண்டு. வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். மன அமைதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 1,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**விருச்சிகம்:** ஊக்கத்தோடு செயல்படும் வாரம். நவகிரஹ அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மையுண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சினைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புகள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புகள் அகலும். சிறப்புக்கள் சேரும். தாய் நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். வேண்டாத நபர் விலகுவர். திடீர் பயணம் ஏற்படும். மாற்று யோசனை பலன் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். வெளிநாட்டு நபருடன் பேச்சு நடக்கும். நிர்வாகத் திறமை கூடும். எதிர்பார்ப்புக்கள் கூடும். பொறுப்புக்கள் கூடும். முன்கோபத்தைத் தவிர்க்கவும். இடமாற்றம் நன்மை தரும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பணத்தட்டுப்பாடு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். அற்புதமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,I (தொடர்ச்சி 22 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1186



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் பம்பலப்பிட்டி, கொழும்பு

*“சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்*
*வேந்தனைச் செந்தமிழ்நூல்விரித் தோனை விளங்குவள்ளி*
*காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்*
*சாந்துணைப் போது மறவாதவர்க் கொரு தாழ்வில்லையே.”*

கனவிலே தோன்றிய கந்தவேளின் வேண்டுகோளை ஏற்ற பக்தர்கள், தாம் தங்கிய இடங்களில் வேலினை வைத்து உபயகதிர்காமம் எனப் பெயர் சூட்டி, ஆடிவேல்விழாவினை தங்கியிருந்த இடங்களிலேயே கொண்டாடி மகிழ்ந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆலயங்களுள் ஒன்றாக, பம்பலப்பிட்டியிலுள்ள புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் மிகச் சிறிய மாடக்கோயிலாக உருவாகிய இக்கோயில், தற்காலத்தில் மிகப் பெரிய ஆலயமாக விளங்குகின்றது.

இவ்வாறு உருவான ஆலயத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, தர்மகர்த்தாசபை ஒன்றினை நிறுவி, ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்ய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் தீர்மானித்தனர். இந்நிலையில் இறைபக்தி மிக்கவரான திரு பழனியப்பச்செட்டியார், செட்டியார் தெருவிலுள்ள புதிய கதிரேசன் கோயிலையும், பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலையும் அபிவிருத்தி செய்ய முன்வந்தார். இந்த நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக, அடியார்கள், அன்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவ்வப்போது ஆலயத்தை புனருத்தாரணம் செய்தார். ஆன்மீக உணர்வும், இறைபணியில் பெருவிருப்பும் கொண்ட திரு. பழனியப்பசெட்டியார், 1958 ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள கதிர்வேலாயுதசுவாமி கோயிலின் தர்மகர்த்தாசபைத் தலைவராக நியமனம் பெற்றார்.

காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட திருப்பணிகளினால், தற்காலத்தில் அழகிய கலைவேலைப்பாடுகளுடனும், சகல வசதிகளுடனும் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் காணப்படுகின்றது. 1958 ஆம் ஆண்டு, திரு. பழனியப்பசெட்டியார் இக்கோயிலின் தர்மகர்த்தாசபைத் தலைவராகப் பொறுக்கேற்றகாலத்தில், இங்கு விநாயகர், இடும்பன், நாகர் ஆகிய மூன்று தெய்வங்களுமே வைக்கப்பட்டிருந்தன. ஆனால் மேலும் பல விக்கிரகங்களை அமைத்து, இவ்வாலயத்தைப் பூரண ஆலயமாக்கவேண்டும் என்ற எண்ணம், தர்மகர்த்தா சபைக்குத் தோன்றியது. இதுவே திரு. பழனியப்பசெட்டியாரின் அவாவாகவும் இருந்தது.

இறைவன் அனுக்கிரகமும், செட்டியார் அவர்களுடைய எண்ணமும் ஒன்றுபட்டமையால், தர்மகர்த்தா சபையினர் செட்டியாருடைய கருத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். உடனடியாக ஆலயத்தை அபிவிருத்தி செய்யும் பணியில் செட்டியார் ஈடுபட்டார். இந்தியாவிலுள்ள மகாபலிபுரத்திலிருந்து நவக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டு, நிறுவப்பட்டன. திரு. பழனியப்பசெட்டியாரின் மகள் திருமதி. மீனாட்சி வினைதீர்த்தான் அவர்களால், காசியிலிருந்து.

காசிலிங்கம் கொண்டுவரப்பட்டு கோயிலுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. மிதுலைப்பட்டியிலிருந்து அம்பாள், ஆவுடையார் ஆகிய தெய்வத்திருவுருவங்கள் கொண்டுவரப்பட்டன.

இவ்வாறாக ஆலயம் படிமுறைவளர்ச்சியைப் பெற்றுவந்த நிலையில், 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆந் திகதி நயினாதீவு பிரம்மஸ்ரீ சி. பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில், அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. விக்னம் தீர்க்கும் விநாயகப் பெருமானின் அருளும், புகழும் எங்கும் பரவ, பக்தர்கள் கூட்டமும் பெருகியது. பக்தர்கள் வேண்டுவதையெல்லாம் வேண்டிய வேளையில் அள்ளிக்கொடுத்த காரணத்தால், பெருகிய கூட்டத்திற்கு ஆலயத்தில் இட வசதி போதாது காணப்பட்டது. அத்தோடு சரிவர இந்துமதக் கிரியைகளை நடத்துவதற்கும் இடவசதி தடையாக அமைந்தது.

ஆலய செயற்பாடுகளுக்கு இடவசதி போதுமானதல்ல என்பதை அனுபவ வாயிலாகக் கண்ட தர்மகர்த்தா சபையினர், ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய விரும்பினர். அவ்வாறே செய்தும் முடித்தனர். ஆலயத்திருப்பணி வேலைகளில் மட்டும் கவனம் செலுத்தாது, சமூக, சலாச்சார பணிகளையும் உயர்நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு செயற்பட ஆரம்பித்தனர். இவற்றின் வெளிப்பாடாக, முத்தமிழையும் போற்றி வளர்க்கவேண்டும் என்ற உயர்நோக்கில், விழா மண்டபம் ஒன்றினை அமைப்பதென 21-10-1972 ஆம் ஆண்டு தீர்மானித்தனர்.

தர்மகர்த்தசபையினர் தாம் நிறைவேற்றிய தீர்மானத்தோடு அமையாது, இதே ஆண்டு புதிய கதிரேசன் மண்டபத்தினை சகல வசதிகளோடும் கட்டி முடித்தனர். கலைவடிவமாக இறைவனைப்போற்றும் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினர், தமிழ் வளர்ச்சிக்குச் செய்த பெரும்பணியாக இதனைக் கருத முடியும். நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரை மட்டுமே முற்று முழுதாகக் கொண்டிருந்த தர்மகர்த்தா சபை, தாம் புகுந்த இடத்திலே மேற்கொண்ட பணிகளினால் மேலும் உயர்ச்சியும் பெருமையும் கொண்டவர்களாக விளங்கினர். இவர்களது அயராத முயற்சியின் காரணமாக மிகச் சிறிய மடாலயமாகக் காணப்பட்ட கொழும்பு புதிய கதிரேசன் ஆலயமும் அதனோடு அமைந்த விழா மண்டபமும் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரின் சமய, சமூக அக்கறையை எடுத்துக் காட்டுவதாகக் காணப்பட்டது.

வளரும்..



## இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** பெத்தவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். வாயில் தேடி வரன் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு ஏற்படும். செயல்திறமை அதிகரிக்கும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். வேண்டாத நபர் விலகுவர். ஆடை, அணிகலன்கள் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை இலாபம் தரும். மாணவர்கள் திறமைகள் பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மனஅமைதி கூடி வரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். தாய் வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். முன் கோபத்தைக் குறைக்க வேண்டும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,8

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,R




**மகரம்:** பிரயாணத்தில் பிரபல்யம் கிடைக்கக்கூடிய வாரம். விரும்பிய பொருள் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பங்குச் சந்தையில் லாபம் பெருகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். தனலாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதினரிக்கும். கௌரவம் உயரும். மனக்குழப்பம் நீங்கும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,O




**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய வாரம். குடும்ப வளர்ச்சி பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மதிப்புகள் உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மனோ பயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்குச் சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனிதாபிமானம் உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கி விடும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர்கள். திருமண முயற்சி நல்லதாக அமையும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 5,2,3,7

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,M




**மீனம்:** பணவரவும், மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். நினைத்தது நிறைவேறும். வாகன மாற்றமுண்டு. மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவுகள் திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கலைத்துறையில் ஆர்வம் கூடும். காரியம் கைகூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பணப்பற்றாக்குறை தீரும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். சாதக சூழ்நிலைகள் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மெத்தனப் போக்கு மாறும். சந்தர்ப்பங்கள் சாதகமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். புதிய நட்பு உருவாகும். சுபச்செய்தி தேடி வரும். நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. தேவைகள் அதிகரிக்கும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவனம் தேவை. போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பானச் செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,7,8,2

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

# "எமது தாயகத்திலிருந்தும் ஏனைய சில நாடுகளிலிருந்தும் அனுபவமிக்க ஊடகவியலாளர்கள் கனடாவிற்கு குடிபெயர்ந்துள்ளமை எமக்கு நம்பிக்கைகளைத் தருகின்றது"

### ஸ்காபுறோவில் "ஆதி தொலைக்காட்சி" என்னும் புதிய காட்சி ஊடகத்தின் தொடக்க விழாவில் "உதயன்" லோகேந்திரலிங்கம்




"எமது தாய் மண்ணான இலங்கையிலிருந்தும் மலேசியா போன்ற தமிழ் மணம் கமழும் ஏனைய சில நாடுகளிலிருந்தும் அனுபவமும் ஆற்றலும் மிக்க பல ஊடகவியலாளர்கள் அண்மைக்காலங்களில் கனடாவிற்கு குடிபெயர்ந்துமை எமக்கு நம்பிக்கைகளைத் தருகின்றது. அவர்களில் பலர் அச்சு ஊடகம் - காட்சி ஊடகம் மற்றும் வானொலித்துறை ஆகியவற்றில் பெற்ற அனுபவங்களை தாங்கள் குடியேறியுள்ள இந்த அற்புத தேசமாம் கனடாவில் பயனுள்ளதாக்க புதிதாக ஊடக நிறுவனங்கள் தேவையாய் உள்ளன. எனவே இன்று தொடங்கிவைக்கப்பெறுகின்ற" "ஆதி தொலைக்காட்சி" என்னும் புதிய காட்சி ஊடகத்திற்கு பல ஆளுமைகளின் தேவை காணப்படுகின்றது. ஏற்கெனவே இந்த தொலைக்காட்சி நிறுவனத்தோடு இணைந்து கிருஸ்ணா போன்ற ஊடகவியலாளர்கள் தங்கள் அனுபவங்களை இந்த காட்சி ஊடகத்தில் பிரயோகிக்கின்ற போது "ஆதி தொலைக்காட்சி" என்னும் புதிய காட்சி ஊடகமும் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் தோன்றும்.

மேற்கண்டவாறு கடந்த 01-03-2026 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோவில் "ஆதி தொலைக்காட்சி" என்னும் புதிய காட்சி ஊடகத்தின் தொடக்க விழாவில் சிறப்புரையாற்றிய கனடா "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தெரிவித்தார். மேற்படி விழாவிற்கு பிரதம விருந்தினராக மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதி மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். நிகழ்ச்சிகளை அறிப்பாளர் வசந்தம் தொலைக்காட்சி புகழ் சாலினி பிள்ளை தொகுத்து வழங்கினார்.

பிரதம விருந்தினர் லோகன் கணபதி அவர்கள் அங்கு உரையாற்றுகையில், ஆதி தொலைகாட்சியானது பெண் ஆளுமையின் இன்னுமொரு வெளிப்பாடு! சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம் சூட்டினார் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கனடாவில் இன்று ஆரம்பிக்கப்பெற்றுள்ள ஆதி (தமிழ்) தொலைக்காட்சி பெண் ஆளுமையின் தலைமையில் ஊடகத்துறைக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் மற்றும் தமிழ்க் கலைகள் மற்றும் பண்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் உதவும் என்று தான் எதிர்பார்ப்பதாக திரு லோகன் கணபதி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இதுவொரு தொலைக்காட்சியின் திறப்புவிழாவாக அல்லாமல் ஒரு கொண்டாட்டமாக பார்க்கிறேன். இந்த தொலைக்காட்சியின் ஆரம்பம் என்பது பெண் ஆளுமையின் இன்னுமொரு வெளிப்பாடாக இருக்கிறது. இந்த நிகழ்வில் இன்னும் பல ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டுள்ளனர். சமூகத்திற்கு நம்பிக்கையான ஊடகங்கள் இருக்க வேண்டும். கனடாவில் பெண் தலைமைத்துவத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் தொலைக்காட்சியாக இதுவாக இருக்கும் என்று நம்பகிறேன். பெண்களின் சிந்தனை, நோக்கம், கண்ணோட்டமும் இந்தச் சமூகத்திற்கு மிக முக்கியமானது. சமூகத்திற்கு துணிந்து உண்மைகளை சொல்லும் ஊடகங்கள் வேண்டும். அச்சமின்றி உண்மையை உரத்துச் சொல்ல வேண்டும். அந்தப் பணியை ஆதி தொலைக்காட்சி செய்யும் என்று நம்புகிறேன்" என்று தெரிவித்தார்.

ஆதி தொலைக்காட்சியின் உரிமையாளர் வினோ ரஞ்சித் சட்டமன்ற உறுப்பினருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், மூத்த ஊடகவியலாளரும், கவிஞரும் சமூக செயற்பாட்டாளருமான, லோகன் லோகேந்திரலிங்கம் உட்பட அங்கு கலந்து சிறப்பித்த அனைவரும் ஆதி தொலைக்காட்சியின் உரிமையாளர் வினோ ரஞ்சித் அவர்களினால் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில், யுகம் வானொலியின் அதிபர் கணபதி ரவீந்திரன் உள்ளிட்டகனடா வாழ் தமிழ்ச் சமூக ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஆதி தொலைக்காட்சியின் தலைமை நிகழ்ச்சிப் பொறுப்பாளராக இலங்கையின் தேசிய ஊடகங்களில் பணியாற்றிய முன்னணி நிகழ்ச்சிப் தொகுப்பாளர், சமூக சிந்தனையாளர் என பல திறமைகளைக் கொண்ட ஆர்ஜே கிருஸ்ணா உட்பட பலர் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.









செய்தியும் படங்களும்: சத்தியன் மற்றும் அலெக்ஸ்


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய $30.00 மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

எமது மக்களுக்கு நன்கு அறிமுகமான
Medcentre Health
Synchronizing Health Sectors
தற்போது எமது சேவைகளும் விரிவுபடுத்தப்பெற்றுள்ளன!
ONE LOCATION. BUT COMPLETE MEDICAL CARE
(416) 297-7777
Medcentre Health
2225 Markham Road
(Ground Floor)
Scarborough, ON M1B 2W4
(Markhan&Finch)



உதயம் 1561 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 6, 2026

# உலகிற்கு கேடு விளைவிக்கும் செயலுக்கு நாங்கள் உடந்தையாக இருக்க மாட்டோம் எனவும் அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணிய மாட்டோம் எனவும் ஸ்பெயின் பிரதமர் பதிலடி!



அமெரிக்காவின் வர்த்தக மிரட்டலுக்கு பயந்து எங்கள் முடிவை மாற்றிக்கொள்ள மாட்டோம் என ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் அதிரடியாக அறிவித்துள்ளார். ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் ராணுவ நடவடிக்கைகளுக்கு ஸ்பெயின் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. குறிப்பாக, ஸ்பெயினில் உள்ள கூட்டு ராணுவத் தளங்களை ஈரான் மீ-தான தாக்குதலுக்கு பயன்படுத்த அமெரிக்காவிற்கு ஸ்பெயின் அனுமதி மறுத்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்க அதிபர் டிரம்ப், "பேச்சை கேட்காவிட்டால் ஸ்பெயின் உடனான வர்த்தகத்தை முற்றிலுமாக துண்டிப்போம்" என கடந்த சில நாட்களுக்கு முன் எச்சரிக்கை விடுத்தார். இந்த மிரட்டலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்பெயின் நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர் பெட்ரோ சான்செஸ், "ஈரான் போர் என்பது லட்சக்கணக்கான உயிர்களுடன் விளையாடும் "ரீயன் ரவுலட்" (ஒரே ஒரு தோட்டா மட்டும் நிரப்பப்பட்டு துப்பாக்கியில் தலையில் சுட்டு விளையாடுவது) போன்ற ஆபத்தானது. வெறும் வர்த்தகப் பழிவாங்கல்களுக்கு பயந்து, உலகிற்கு கேடு விளைவிக்கும் செயலுக்கு நாங்கள் உடந்தையாக இருக்க மாட்டோம். இது எங்கள் கொள்கை மற்றும் நலன்களுக்கு எதிரானது" என திட்டவட்டமாக தெரிவித்தார். தெற்கு ஸ்பெயினில் உள்ள இரண்டு முக்கிய ராணுவத் தளங்கள் குறித்து பேசிய டிரம்ப், "ஸ்பெயின் அனுமதி அளிக்காவிட்டாலும், நாங்கள் நினைத்தால் அங்கு விமானங்களை இறக்கி பயன்படுத்த முடியும்" என தன்னிச்சையாக கூறினார். ஆனால், அந்த தளங்கள் ஸ்பெயினின் கட்டுப்பாட்டில் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள சான்செஸ், போருக்கு "நோ" என்ற வார்த்தைகளில் தனது நிலைப்பாட்டைச் சுருக்கினார். ஏற்கனவே காசா போரின் போது இஸ்ரேலை விமர்சித்த ஸ்பெயின், இப்போது ஈரான் விவகாரத்திலும் அமெரிக்காவை எதிர்ப்பது சர்வதேச அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக உள்ள ஸ்பெயின் மீது டிரம்ப் எப்படி தனிப்பட்ட முறையில் வர்த்தகத் தடையை விதிக்க முடியும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மேலும், இந்த போர் ஈராக் போரைப் போலவே பயங்கரவாதத்தை மீண்டும் தூண்டிவிடும் என்றும் சான்செஸ் எச்சரித்துள்ளார்.



# அமெரிக்காவின் "கொலைவெறித் தாக்குதல்" காரணமாக இலங்கைக் கடலில் பலியான 84 ஈரானிய கடற்படையினர்!

## மனித நேயத்தைக் காட்டி நிற்கும் இலங்கையும் இந்தியாவும்!



தாக்குதலுக்கு உள்ளான கப்பலிலிருந்து 32 ஈரானியர்கள் உயிருடன் மீட்கப்பட்டு காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்அத்துடன் மற்றுமோர் ஈரானிய கப்பலில் 300 உயிருடன் உள்ள படையினருக்கு உணவு , நீர் உதவி தேவை எனக் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் உதவியை வழங்க இந்தியா முன் வந்துள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

காலிக் கடலில் உயிரிழந்த ஈரானிய கடற்படையினரின் உடல்களை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலித்துறைமுகத்தில் இருந்து 40 கடல்மைல் தொலைவில் பயணித்த ஈரானிய கப்பல் மீது அமெரிக்க கப்பல் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்த 84 ஈரானியர்களின் உடல்கள் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு காலி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# "அரச மதமும் தனியார் காணியும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தையிட்டி தொடர்பான ஒரு கலந்துரையாடல்!

தனியார் காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை முன்னிறுத்திய கலந்துரையாடல் "அரச மதமும் தனியார் காணியும்" எனும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால் ஒழுங்கமைப்பில் 27ம் திகதி அன்று (27.02.2026) வெள்ளிக்கிழமை, பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கில், சிங்கள பௌத்த மதச் சின்னங்களை முன்னிறுத்திய நில ஆக்கிரமிப்புக்களில் முதன்மையான தையிட்டி விவகாரத்தில் அரச மதத்தை மையமாகக் கொண்ட தனியார் காணி உரிமைகள் தொடர்பாக எழுந்துள்ள சமூக, சட்ட, அரசியல் மற்றும் மனித உரிமை பரிமாணங்கள் மற்றும் இனத்துவ அரசு என்பவை தொடர்பில் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது.




# நல்லகண்ணு ஐயாவின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது! – யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு அவயங்களை இழந்தவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஒருவருமே வெற்றி பெறவில்லை. அவர்களுக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்ட முன்னாள் இயக்கத்தவர் ஒருவர் சொன்னார் கிட்டத்தட்ட 15,000 வீடுகளுக்கு ஏறி இறங்கியிருப்போம் என்று. ஆனால் அவர்கள் எந்தப் பெண்ணுக்காகப் பிரச்சாரம் செய்தார்களோ,எந்த மக்களுக்காக அந்தப் பெண் தன் ஒரு காலை இழந்தாரோ, அவருக்கு கிடைத்த வாக்குகள் வெறும். 2000. ஆனால் அர்ஜுனாவுக்கு கிடைத்தவை அதைவிடப் பல மடங்கு. அப்படியென்றால் தமிழ் மக்கள் யார் தங்களுக்குத் தலைவர்களாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள் ?

---

தமிழ்நாட்டில் மூத்த கொம்யூனிஸ்ட் தலைவர் நல்ல கண்ணு இயற்கை எய்தி சில நாட்களில் நடிகர் விஜய்யின் மனைவி விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தை அணுகிய செய்தி வெளிவந்தது

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



# போர் பதற்றத்திற்கு இடையே...ராணுவத்துக்கு செலவிடும் தொகையை உயர்த்தியது சீனா

சீனா தனது ராணுவத்திற்கு செலவிடும் தொகையை 275 பில்லியன் டாலராக (ரூ.25 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது. கடந்த பட்ஜெட்டை விட 2.5 பில்லியன் டாலர் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸ் சபையில் பட்ஜெட்டை அந்நாட்டு பிரதமர் லி கியாங் தாக்கல் செய்தார். அதில் இந்த தகவல் இடம் பெற்றுள்ளது. அதிகரித்து வரும் போர் பதற்றத்திற்கு இடையே சீனா தனது ராணுவத்திற்கு செலவிடும் தொகையை அதிகரித்து இருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. போர் தளவாடங்களை நவீனப்படுத்துவது உள்ளிட்ட செலவினங்களுக்காக பட்ஜெட்டில் கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. உலக அளவில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக அதிக தொகையை செலவிடும் நாடாக சீனாவே உள்ளது. சீனா கடந்த 2024 ஆம் ஆண்டு தனது ராணுவத்திற்கு முந்தைய ஆண்டை விட 7.2 சதவீதம் உயர்த்தியிருந்தது. ஆண்டுக்கு ஆண்டு சீனா தனது ராணுவத்திற்கு செலவிடும் தொகையை உயர்த்தி வருவது இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு பெரும் சவாலானதாக அமைந்து இருப்பதாக பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.